E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2023 ஏப்ரல் 8 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 91 இல. 84 | Saturday 08, April, 2023 | 10 பக்கங்கள் | 50/-

## இலங்கையர் நாட்டுக்கு அனுப்பும் பணம் அதிகரிப்பு

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர் நாட்டுக்கு அனுப்பும் பணம் அதிகரித்துள்ளதாக, இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர் கடந்த மாதம் 568.3 06

தமிழ் – சிங்கள புத்தாண்டு காலத்தில்

## நடைபாதை வியாபாரிகள் பிரச்சினைகளுக்கு தீர்வு



தமிழ் - சிங்கள புத்தாண்டுக் காலத்தில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு வியாபாரங்களை முன்னெடுப்பதற்குத் தேவையான வசதிகள், நடைபாதை வியாபாரிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படுமென, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்புத்துறை வியாபாரச் சங்கம் மற்றும் நடைபாதை வியாபாரிகள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் (06) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பொன்றின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 06

## டுபாயிலிருந்து இலங்கை வந்த தந்தை, மகன் நாடு கடத்தல்

ஐரோப்பாவுக்கு தப்பிச் செல்லும் நோக்கில் போலியான டொமினிகன் குடியரசு கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கைக்குள் பிரவேசிக்க முயன்ற ஈராக் இளைஞர் ஒருவரையும் அவரது தந்தையையும் நாடு கடத்த கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

18 வயதான ஈராக் இளைஞர் தனது தந்தையுடன் டுபாயிலிருந்து நேற்று (07) அதிகாலை 1.10 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இலங்கைக்குள் பிரவேசிப்பதற்காக, கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்திலுள்ள குடிவரவுத் திணைக்கள கரும பீடத்தில் டொமினிகன் குடியரசு கடவுச்சீட்டு மற்றும் ஏனைய 06




இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு 40 நாட்கள் உபவாசம் இருந்ததாகவும் அந்த நாட்களை உலகம் முழுவதுமுள்ள கிறிஸ்தவர்கள் ஆண்டு தோறும் தவக்காலமாகக் கடைப்பிடித்து, பின் நேற்று வெள்ளிக்கிழமையை புனித வெள்ளியாக நினைவுகூர்ந்தனர். நேற்று வத்தளை புனித அன்னம்மாள் ஆலயத்தை நோக்கி அடியார்கள் சிலுவையை ஏந்தி சென்றனர். அதேபோன்று, நாடு முழுவதும் அனைத்து தேவாலயங்களிலும் சிறப்பு வழிபாடுகள் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன. (படம்: கயான் புஷ்பிக)

தோட்ட தொழிலாளர் எதிர்நோக்கும்

## தொழில்சார் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வை வழங்குங்கள்

### மத்துரட்ட தோட்ட நிர்வாகத்திடம் இ.தொ.கா. வலியுறுத்து



தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வை வழங்குமாறு மத்துரட்ட பெருந்தோட்ட நிறுவனத்தின் நிர்வாகத்திடம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவதற்கு முன்னர், தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு 06

விவசாயத்துறை அதிகாரிகளுக்கு

## நீண்டகாலம் வெளிநாடு செல்ல அனுமதி இல்லை

### அமைச்சர் அமரவீர அதிரடித் தீர்மானம்



விவசாயத்துறையின் அனைத்து அதிகாரிகளுக்கும் நீண்டகாலத்துக்கு வெளிநாடு செல்வதற்கான அனுமதியை வழங்குவதில்லையென்று, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தீர்மானம் எடுத்துள்ளார்.

விவசாய அமைச்சு, விவசாயத் திணைக்களம், விவசாய அபிவிருத்தித் திணைக்களம் உள்ளிட்ட அனைத்து மாகாண விவசாய நிறுவனங்களிலும் பணி புரியும் 06

எக்ஸ்பிரஸ் பேர்ள் அனர்த்தப் பாதிப்பு

# கடற்றொழில்சார் குடும்பங்களுக்கு 151 கோடி ரூபா பகிர்ந்தளிப்பு

### புத்தாண்டுக்கு முன் வழங்குமாறு அமைச்சர் டக்ளஸ் பணிப்பு



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான 4ஆவது கட்ட நட்டஈட்டை தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன் வழங்குவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக்கப்பல் விபத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழில் சார்ந்த மக்களுக்கான 4ஆவது கட்ட நட்டஈட்டுத் தொகையாக சுமார் 151 கோடியே 49 இலட்சம் ரூபா (ரூ.1,514,900,000), கடற்றொழில் அமைச்சரின் தொடர்ச்சியான முயற்சியினால், கடற்றொழில் அமைச்சுக்கு கிடைத்துள்ளது. அவற்றை உடனடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கான ஆலோசனைகளும் கடற்றொழில் அமைச்சரினால் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதன்படி நான்காம் கட்ட நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வோர் தொடர்பான விபரங்கள் 06

> 04 ஆவது கட்டமாக கிடைத்துள்ள நட்டஈட்டு பணத்தை பாதிக்கப்பட்ட கடற்றொழில்சார் குடும்பங்களுக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுப்பு

புத்தாண்டு கொண்டாட்டத்துக்கு சென்ற

## முன்பள்ளியின் ஆசிரியை கழுத்து வெட்டி படுகொலை



புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் பங்கேற்பதற்காக நேற்று (07) தனது முன்பள்ளிக்குச் சென்ற இருபத்தைந்து வயதுடைய முன்பள்ளி ஆசிரியை ஒருவர் கழுத்து வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்த படுகொலை சம்பவம் தொடர்பில் பேராதனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். 06

## 26 எரிபொருள் நிலையங்களுக்கு விநியோகம் இடைநிறுத்தம்


### லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அதிரடி அறிவிப்பு



லங்கா ஐ.ஓ.சிக்கு சொந்தமான 26 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக, லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது. QR ஒதுக்கீட்டை தொடர்ந்து அதனைக் கடைப்பிடிக்காத எரிபொருள் நிலையங்களுக்கு எதிராகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 06

2019 இல் ஆபத்தான கடல் மார்க்கமாக

## நியுசிலாந்துக்கு பயணமான 248 இலங்கையர் உயிரிழந்தனரா?



2019 இல் நியுசிலாந்துக்கு ஆபத்தான கடல் பயணத்தை மேற்கொண்ட இலங்கையர் தொடர்பாக புதிய தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன. இவர்கள் காணாமல் போயிருக்கலாமென, நியுசிலாந்தின் ஊடகமொன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

நியுசிலாந்தைச் சென்றடைவதற்கு முயற்சிகளை மேற்கொண்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் 06

நாட்டின் வரட்சியான காலநிலை

## கிழக்கில் களைகட்டும் வெள்ளரிப்பழம் விற்பனை



தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக அம்பாறை மாவட்ட கரையோரப் பகுதிகளிலுள்ள பிரதான வீதியோரங்களில் ஆங்காங்கே சர்க்கரை வெள்ளரிப்பழ விற்பனை அதிகரித்துக் காணப்படுகின்றது.

சம்மாந்துறை, அம்பாறை, கல்முனை, அக்கரைப்பற்று பிரதான வீதியோரங்களில் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகளில் சர்க்கரை வெள்ளரிப்பழங்களை வியாபாரிகள் கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர்.

இதனை பொதுமக்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இது தவிர, தற்போது அதிக வெப்பம் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் சர்க்கரை வெள்ளரிப்பழங்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன், வெள்ளரிப்பழமொன்று 150 ரூபா முதல் சுமார் 850 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு 06

தமிழ் – சிங்கள புத்தாண்டை முன்னிட்டு


## 7,000 அரச, தனியார் பஸ்கள் 18ஆம் திகதி வரை சேவையில்



தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விசேட போக்குவரத்து திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 06

## இலங்கைக்கான கடன் நிவாரண ஒப்பந்தத்துக்கு சீனா உதவியது

### IMF தலைவர் ஜோர்ஜிவா தெரிவிப்பு



இலங்கைக்கான கடன் நிவாரண ஒப்பந்தத்தை எட்டுவதற்கு சீனா உதவியதாக, சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா தெரிவித்துள்ளார்.

சாம்பியா, கானா மற்றும் எதியோப்பியா போன்ற நாடுகளுக்கான கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களையடைய சீனா தனது பணியை விரைவுபடுத்த வேண்டுமென்று சீனாவின் 06

## பொதுச்சேவை ஆணைக்குழு புதிய உறுப்பினர்கள் நியமனம்

அரசியலமைப்புச் சபையின் பரிந்துரை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அங்கீகரிக்கப்பட்டதையடுத்து, பொதுச்சேவை ஆணைக் குழுவுக்கு புதிய தலைவர் உட்பட உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, பொதுச்சேவை ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற சிரேஷ்ட நிர்வாக அதிகாரி சனத் ஜயந்த எதிரிவீர நியமிக்கப்பட்டுள்ளார். பொதுச் சேவை ஆணைக்குழுவின் ஏனைய 06

## யாழ்ப்பாணத்தில் பாணின் விலை 10 ரூபாவால் குறைப்பு



யாழ்ப்பாணத்தில் பாணின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக, கூட்டுறவு பேக்கரி உற்பத்தியாளர் சங்கத்தின் 06

## சமுர்த்தி கொடுப்பனவை அதிகரித்து வழங்குவதாகக்கூறி பணம் மோசடி

### தனிமையிலிருக்கும் வயோதிபர்களே இலக்கு

**யாழ். விசேட நிருபர்**




சமுர்த்தி உதவிக் கொடுப்பனவை அடுத்த மாதம் முதல் இரட்டிப்பாக அதிகரித்து வழங்குவதாகத் தெரிவித்து, தனிமையிலிருந்த வயோதிபப் பெண்ணொருவரிடம் இனந்தெரியாத ஒருவரால் பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், அச்சுவேலி வளலாயில் 06ஆம் திகதி வியாழக்கிழமை மதியம் இந்தச் சம்பவம் 06

முன்பள்ளி பிள்ளைகளிடம்

## பஞ்சாயுதங்களை திருடிய பெண்ணொருவர் கைது



முன்பள்ளியொன்றில் அழுதுகொண்டிருந்த சிறுவர்களை ஆறுதல் படுத்துவதாகக் கூறி, அச்சிறுவர்களின் தங்கத்தினாலான பஞ்சாயுதம் எனும் ஐம்படைத்தாலிகளை திருடிய பெண்ணொருவரை ஆனமடுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 32 வயதுடைய ஆலங்குளம், ஆனமடுவ பிரதேசத்தைச் சேர்ந்தவரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கைதான பெண் ஆலங்குளம், வட்டேகெதர உள்ளிட்ட பகுதிகளிலுள்ள முன்பள்ளிகளுக்குச் சென்று, அம்முன்பள்ளிகளில் அழுது கொண்டிருக்கும் 06

Your Bank Is Wherever You Are

ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 06-11 |
|---|---|
| ஸஹர் முடிவு | 04.35 |
| ஸுபஹ் | 04.50 |
| சூரிய உதயம் | 06.07 |
| ழுஹர் | 12.14 |
| அஸர் | 03.16 |
| மஹ்ரிப் | 06.19 |
| இஷா | 07.30 |

Call 0117 756 756
www.amanabank.lk

It's Your Bank

# சர்வதேச செய்திகள்

# லெபனான், காசா மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் கடும் தாக்குதல்

## ரொக்கெட் குண்டுகளை அடுத்து பதற்றம்



பலஸ்தீன போராட்டக் குழுவான ஹமாஸ் அமைப்பை இலக்கு வைத்து காசா மற்றும் லெபனானில் இஸ்ரேல் நேற்று (07) அதிகாலை சரமாரி வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்த இரு பகுதிகளில் இருந்தும் இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டதற்கு பதில் நடவடிக்கையாகவே இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

தெற்கு லெபனானில் ஹமாஸ் 'பயங்கரவாதிகளின்' கட்டமைப்பு ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

ஜெருசலம் அல் அக்ஸா பள்ளிவாசல் மீது இஸ்ரேலியப் படை இந்த வார ஆரம்பத்தில் தொடர்ச்சியாக இரு தினங்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளை அடுத்தே பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்தப் பள்ளிவாசல் முஸ்லிம்களின் மூன்றாவது புனிதத் தலம் என்பதோடு இந்த சுற்றிவளைப்பு பலஸ்தீனத்திலும் பிராந்தியத்திலும் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

லெபனானில் இருந்து இஸ்ரேல் மீது ரொக்கெட் குண்டுகள் வீசப்படும்போது ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே லெபனானில் இருந்தார். "இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு முன்னால் பலஸ்தீனர்கள் தங்கள் கைகளைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்கமாட்டார்கள்" என்று அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படை நேற்று வெள்ளிக்கிழமை காலை வெளியிட்ட அறிவிப்பில், தெற்கு லெபனானில் ஹமாஸுக்கு சொந்தமான பயங்கரவாதக் கட்டமைப்பு உட்பட இலக்குகளை தாக்கியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

லெபனானில் இருந்து ஹமாஸ் இயங்குவதை அனுமதிக்க முடியாது என்றும் அங்கிருந்து இயக்கப்படும் ஒவ்வொரு தாக்குதல்களுக்கும் லெபனான் பொறுப்பேற்க வேண்டும் என்றும் இஸ்ரேலிய பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

லெபனானில் இருந்து கடந்த வியாழக்கிழமை வீசப்பட்ட ஏவுகணைகள் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்று ஹமாஸ் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலின் வடக்கு அண்டை நாடான லெபனானில் இருந்து கடந்த 17 ஆண்டுகளில் நடத்தப்பட்ட மிகப்பெரிய ஒற்றைத் தாக்குதலாக இது பதிவாகியுள்ளது. அங்கிருந்து 34 ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கும் இஸ்ரேல், ஐந்து குண்டுகள் கட்டடங்களுக்கு சேதத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிவித்துள்ளது.

மறுபுறம் இஸ்ரேலிய போர் விமானங்கள் காசா மீது தாக்குதல் நடத்தியதோடு சுமார் 20 ஏவுகணைகள் கொண்டு 10 நிமிடங்களில் நான்கு புதிய தளங்கள் தாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது. பலஸ்தீன போராளிகள் தெற்கு இஸ்ரேல் மீது புதிய சுற்று ரொக்கெட் குண்டுகளை வீசியதோடு இதனையொட்டி இஸ்ரேலில் சைரன் ஒலி எழுப்பப்பட்டது.

இஸ்ரேலிய ஜெட்கள் நிலத்தடி ஆயுத உற்பத்தி தளம் ஒன்றின் மீதும் நிலத்தின் மேலுள்ள மூன்று தளங்கள் மீதும் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 2022 ஒகஸ்டில் இஸ்லாமிய ஜிஹாத்துடனான மோதலுக்குப் பின் இஸ்ரேல் நடத்திய தீவிர வான் தாக்குதலாக இது உள்ளது.

இஸ்ரேல் பிரதமர் நடத்திய அவசர அமைச்சரவைக் கூட்டத்தை அடுத்தே இந்த பதில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட நெதன்யாகுவின் உரையில் அவர் கூறியதாவது, "நாம் எதிரிகளை தாக்குவோம் என்பதோடு அனைத்து வகையான தாக்குதல்களுக்காகவும் அவர்கள் விலை கொடுப்பார்கள்" என்றார். "வன்முறையை பயன்படுத்தும் கடும்போக்காளர்களுக்கு எதிராக நாம் தீர்க்கமாகச் செயற்படுவோம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமது நாட்டுக்குள் இருந்து செயற்பாடும் எந்த ஒரு ஆயுத நடவடிக்கையையும் கண்டிப்பதாகக் குறிப்பிட்ட லெபனான் பிரதமர் நபில் மிகாதி, "அது நிலைமையை ஸ்திரமற்றதாக மாற்றும்" என்று எச்சரித்தார்.

லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் படை, நிலைமை தீவிரமாக உள்ளதாகவும் மேலும் தீவிரம் அடைவதை தவிர்க்கும்படியும் வலியுறுத்தியுள்ளது.

அல் அக்ஸா பள்ளிவாசலில் இடம்பெற்ற மோதல்களை அடுத்து, இஸ்ரேலுக்கு எதிராக செயற்படும் பலஸ்தீன போராளிகளின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆதரவு அளிப்பதாக லெபனான் ஆயுதக் குழுவான ஹிஸ்புல்லா எச்சரிக்கை விடுத்திருந்தது.

ஹிஸ்புல்லா அமைப்பு ஹமாஸ் மற்றும் காசாவை தளமாகக் கொண்ட மற்றொரு போராட்டக் குழுவான இஸ்லாமிய ஜிஹாத் அமைப்புடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ளது.

லெபனான் மீதான வான் தாக்குதல் ஹிஸ்புல்லா அமைப்பை மோதலுக்குள் இழுக்கும் அச்சுறுத்தலை அதிகரித்துள்ளது. அவ்வாறான ஒரு மோதல் போருக்கு இட்டுச் செல்லும் வாய்ப்பு உள்ளது. ஈரான் ஆதரவு அமைப்பான ஹிஸ்புல்லா இஸ்ரேலை பெரும் எதிரியாகப் பார்க்கிறது. எனினும் ஹமாஸ் அமைப்பை இலக்கு வைத்தே லெபனானில் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் கவனமாக அறிவித்துள்ளது.

எனினும் ஹிஸ்புல்லாவின் அனுமதியுடனேயே லெபனானில் இருந்து ஹமாஸ் தாக்குதல் நடத்தி இருக்கக் கூடும் என்று இஸ்ரேலிய பாதுகாப்பு ஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே 2006ஆம் ஆண்டு வெடித்த போர் ஒரு மாத காலம் நீடித்தமை குறிப்பிடத்தக்கது.

அல் குலைலா மற்றும் மேலும் இரு எல்லை கிராமங்களான டைரேமலியா மற்றும் சிப்கினுக்கு அருகில் இருந்தே ரொக்கெட் குண்டுகள் ஏவப்பட்டிருப்பதாக லெபனான் இராணுவம் தெரிவித்துள்ளது. ஏவு கருவிகள் மற்றும் வீசப்படாத ரொக்கெட் குண்டுகளின் படங்களை வெளியிட்டிருக்கும் லெபனான் இராணுவம் அவை குறித்த பகுதிகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இராணுவ நடவடிக்கைகள் தற்போது நிறைவடைந்திருப்பதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது. 'இப்போது மோதலை விரிவுபடுத்த யாரும் விரும்பவில்லை' என்று இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

'அமைதி நிலைக்கு அமைதியால் பதிலளிக்கப்படும். தற்போதைய நிலையிலும் எதிர்வரும் மணி நேரங்களிலும் இந்த நிலை நீடிக்கிறது' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

10 பேருடன் மாயமான

## ஜப்பானிய ஹெலியின் பாகங்கள் கண்டுபிடிப்பு



பத்து பேருடன் காணாமல்போன ஜப்பான் இராணுவ ஹொலிகொப்டர் ஒன்று ஒகினாவா கடற்பகுதியில் விழுந்திருப்பதாக நம்பப்படுகிறது.

மீட்பு மற்றும் தேடுதல் நடவடிக்கையின்போது இந்த ஹெலியினுடையது என்று சந்தேகிக்கப்படும் பாகங்கள் மிதப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. "இந்த ஹெலி விபத்துக்கு முகம்கொடுத்திருப்பதாக நாம் நம்புகிறோம்" என்று ஜெனரல் யசுனோரி மொரிசிட்டா டோக்கியோவில் வைத்து தெரிவித்துள்ளார்.

பிளக் ஹவுக் என்று அறியப்படும் யு.எச்60 ஹொலிகொப்டர் மியாகோ தீவுகளுக்கு அருகில் கடந்த வியாழக்கிழமை ராடார் திரையில் இருந்து காணாமல்போனது. ஜப்பானில் தரைத் தற்காப்புப் படையினராலேயே இந்த ஹெலி பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது எண்ணெய் கசிவு மற்றும் ஹெலியின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனினும் அது காணாமல்போன ஹெலியினுடையது என்பது உடன் உறுதி செய்யப்படவில்லை.

ஹெலிகொப்டரில் 10 பேர் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்களது உயிரைக் காப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று ஜப்பானியப் பிரதமர் பூமியோ கிஷிடா குறிப்பிட்டார்.

---

## இந்து, இந்தியன் என்பதால் தகுதி நீக்கம் செய்யப்பட்டேன்

### லண்டன் சட்டக் கல்லூரி மாணவன் புகார்; மாணவர் சங்கத் தேர்தலில் போட்டியிட தடையாம்

லண்டன் சட்டக் கல்லூரியில் பயிலும் இந்திய வம்சாவளி மாணவரான கரண் கட்டாரியா, இந்தியா மீதான குரோதம் மற்றும் இந்துவாக இருத்தல் என்ற காரணங்களால் தான் மாணவர் சங்கத் தேர்தலில் பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிடுவதில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக மாணவர் சங்கத்தின் மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேசமயம் லண்டன் பொருளாதாரக் கல்லூரி மாணவியான தேஜஸ்வனி சங்கர், தான் தன் நண்பரான கட்டாரியாவுக்காக வேலை செய்ததற்காக ஒரு பிரிவினர் தன் மீது குறி வைப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். கட்டாரியா மீது சுமத்தப்பட்ட புகார்களை உடனடியாக விசாரித்து அவரை போட்டியிடுவதில் இருந்து தகுதி நீக்கம் செய்த அதே மாணவர் சங்கம், தான் குறிவைக்கப்படுவதாக தெரிவித்த புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை தன் ட்விட்டர் பக்கத்தில் 'பாகுபாடு காட்டப்படுவதாக' சுட்டிக் காட்டியுள்ளார். பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிட்ட கட்டாரியா வாக்களிப்புக்கு முன்தினம் தான் தகுதி நீக்கம் செய்யப்பட்டதாகவும் தான் சுயபால் சேர்க்கை விரோதி, மாற்றுப் பாலுறவு இச்சைகளுக்கு எதிரானவன் ஒரு இந்து தேசியவாதி என்ற குற்றச்சாட்டுகளே தன் மீது சுமத்தப்பட்டதாகவும் தகவல் தெரிவித்துள்ளார்.

'எனக்கு மாணவர் மத்தியில் ஆதரவு உள்ளது. என் நண்பர்களும் வகுப்பு மாணவர்களும் தந்த ஆதரவினாலேயே பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிட்டேன். ஆனால் ஒரு இந்து இந்தியன் கைகளுக்கு மாணவர் சங்கம் சென்றுவிடக் கூடாது என்பதால் ஒரு பிரிவினர் குரோதம் கொண்டு போலி குற்றச்சாட்டுகளின் பேரில் என்னை தகுதி நீக்கம் செய்தனர்' என்று இவர் கூறியுள்ளார். வாக்கெடுப்பு தினத்தன்று இந்திய மாணவர்கள் வம்புக்கு இழுக்கப்பட்டனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

---

## தாய்வானிய ஜனாதிபதியின் அமெ. பயணத்தால் பதற்றம்



மிகவும் எதிர்பார்க்கப்பட்ட தாய்வான் ஜனாதிபதி சாய் இங்–வென், அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகர் கெவின் மெக்கார்த்தி இடையேயான சந்திப்புக்கு பதிலளிக்கும் விதமாக சீனா இராணுவ ஒத்திகையை ஆரம்பித்துள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் ஹட்சன் கல்வி நிறுவனம் சாய் இங்–வென்னுக்கு சர்வதேச தலைமைத்துவ விருது விழங்கி கௌரவித்த நிலையில், ஒரு வாரத்திற்குப் பின் கலிபோர்னியாவில் கடந்த புதன்கிழமையன்று இருவருக்கும் இடையேயான சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

அமெரிக்கா – தாய்வான் இடையேயான உறுதியான, தனித்துவ கூட்டாண்மையை சாய் பாராட்டி பேசினார். இதேபோன்று, தாய்வானுடனான தங்களின் ஆயுத விற்பனை தொடரும் என்று மெக்கார்த்தி கூறினார்.


தங்களின் ஒருபகுதிதான் தாய்வான் என்று கூறிவரும் சீனாவுக்கு இந்த சந்திப்பு ஆத்திரமூட்டியுள்ளது. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக தாய்வானை சுற்றியுள்ள பகுதிகளுக்கு போர் கப்பல்களை அனுப்பியுள்ளது.

சீனாவின் விமானதாங்கிக் கப்பலான ஷன்டொங், தாய்வானின் கிழக்கு கடற்கரைக்கு அப்பால் 200 கடல் மைல் தொலைவில் நிலைகொண்டிருப்பதாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சர் சியு கு செங் கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சீனாவின் இந்த அத்துமீறலை தாய்வான் அரசு கண்டித்துள்ளது. மேலும் ஆயுதப்படைகள் நிலைமையை தீவிரமாக கண்காணிப்பதாகவும் விமானங்கள் கடற்படை கப்பல்கள் ரோந்து சுற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## இந்திய எல்லையை காக்க அமெரிக்கா உதவ திட்டம்



இந்தியா தனது எல்லைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தேவையான அதிநவீன தொழில்நுட்பத்தை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதியின் பிரதி உதவியாளரும் இந்து – பசுபிக் பிராந்திய இணைப்பாளருமான குர்ட் கெம்பெல் தெரிவித்துள்ளார்.

வொஷிங்டனைத் தளமாகக் கொண்டுள்ள சிந்தனை குழுவின் கூட்டமொன்றில் உரையாற்றும் போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், இந்தியாவின் கடல் சார் மற்றும் கடற்படைத் திறன்களை வலுப்படுத்துவதற்கு உதவும் வகையில் இராணுவ உபகரணங்களின் இணை உற்பத்தி மற்றும் இணை மேம்பாட்டு கருவிகளும் பெற்றுக்கொடுக்கப்படும் என்றார்.

21 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவுக்கு இந்தியாவின் நட்புறவும் இருபக்க உறவும் மிகவும் முக்கியமானது. நாங்கள் மிகவும் நெருக்கமாகவும் ஒன்றிணைந்தும் பணியாற்றக் கடமைப்பட்டுள்ளோம் என நான் நம்புகிறேன் என்றும் அவர் கூறினார்.

இக்கலந்துரையாடலின் போது இந்தியாவுடன் கூட்டு உளவுத்துறை மதிப்பாய்வுகளை அமெரிக்கா மேற்கொள்ள வேண்டும் என்று சிந்தனைக் குழுவினரால் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்தோடு இந்திய–சீன எல்லை விவகாரங்கள் குறித்தும் இங்கு கருத்து பரிமாறப்பட்டுள்ளது.

---

## சீன விளையாட்டுத்துறையில் பரவலாக ஊழல்

### விசாரணைகள் தீவிரம்; விசாரணை வலயத்தில் உயர் அதிகாரிகள்

சீன உதைப்பந்தாட்டத்துறையில் ஊழல் மோசடிகள் நிலவுவதாகக் கிடைக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உத்தரவின்பேரில் உயர் மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டின் இறுதிமுதல் விளையாட்டுத்துறையுடன் தொடர்புயை 12 உயர் அதிகாரிகள் விசாரணை வலயத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர். சீன உதைப்பந்தாட்ட சங்கங்களின் முன்னாள் இந்நாள் அதிகாரிகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சீன உதைப்பந்தாட்ட சங்க ஒழுக்கவியல் குழுவின் தலைவர் வாங் ஸியாவோபிங், போட்டிப் பிரிவின் பணிப்பாளர் ஹூவாங் சொங் ஆகியோர் விசாணைக்குட்படுத்தப்பட்டனர்.

சீன விளையாட்டுத்துறையின் பதில்பொது நிர்வாகி டு ஸவோகாய் ஒழுக்க மீறல் மற்றும் சட்ட மீறல்களில் ஈடுபட்டதாகக் கருதப்பட்டு அவர் மீது விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. சீன விளையாட்டுத்துறையில் பல உயர் பதவிகளை வகித்தவரும், இத்துறையின் நிர்வாக பொறுப்பில் 30 வருட அனுபவம் பெற்றவருமான 63 வயதான முன்னாள் இங்லிஸ் பிரிமியர் லீக் வீரரான லீடை விசாரணைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டில் சீனா குளிர்கால ஒலிம்பிக் போட்டியை நடத்திய பின்னர் உரையாற்றி சீன ஜனாதிபதி ஸிஜின்பிங், சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களின் திறமையை அதிகரிக்க வேண்டும் என்றும் விளையாட்டுத்துறையில் சீனா ஒரு பெருஞ்சக்தியாகத் திகழ வேண்டும் என்றும் அழைப்பு விடுத்திருந்தார். அதன் பின்னரான விளையாட்டுத்துறை மறுசீரமைப்பு முயற்சிகளின்போது பரவலாக ஊழல் மோசடிகள் நிலவுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இத் தொடர் விசாரணைகளில் மேலும் பலர் சிக்குவார்கள் என சீன விளையாட்டுத்துறை வட்டாரங்கள் யூகம் வெளியிட்டுள்ளன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஏப்ரல் 8 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්



தொழுகை நேரம்
சுபஹ் - 04.50
லுஹர் - 12.14
அஸர் - 03.16
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் பங்குனி 25
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

ஐ.எஸ். தொடர்பு குழுவால்

## கொங்கோவில் சுமார் 30 பொதுமக்கள் படுகொலை

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் ஐ.எஸ். இயக்கத்துடன் தொடர்புடைய குழுவொன்றினால் 30க்கும் அதிகமானோர் இவ்வார முற்பகுதியில் கொல்லப்பட்டுள்ளதாக, கொங்கோவிலுள்ள ஐ.நா. அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதூரி மாகாணத்தில் கூட்டணி ஜனநாயகப் படைகள் (ஏடிஎவ்) எனும் இயக்கத்தினால் கடந்த ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை இக்கொலைகள் நடத்தப்பட்டதாக, கொங்கோ ஜனநாயகக் குடியரசிலுள்ள ஐ.நா. அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் மீதான இத்தாக்குதலை தான் கண்டிப்பதாகவும் இக்கொலைகள் தொடர்பாக விசாரணை செய்து, பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறும், கொங்கோவிலுள்ள அமைதிப்படையின் தலைவர் பின்டோ கெய்டா கோரியுள்ளார்.

இதேவேளை, இதூரி மாகாணத்தில் கடந்த டிசெம்பர் முதலாம் திகதிக்கும் மார்ச் 14ஆம் திகதிக்கும் இடையில் 485 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக, ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டேரெஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அபிவிருத்தி கொள்கை

# உலக வங்கி பிரதிநிதிகள் பாராட்டு



இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றங்களுக்கு உலக வங்கிப் பிரதிநிதிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை செயற்பாட்டுத் திட்டம் தொடர்பில் உலக வங்கிப் பிரதிநிதிகளுடனான இறுதிச்சுற்று பேச்சுவார்த்தை, தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் தலைமையில் (06) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற போதே, உலக வங்கிப் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு பாராட்டுத் தெரிவித்திருந்தனர்.

பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகத்தை (*Parliamentary Budget Office*) நிறுவுதல், அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்தல், நலன்புரிக் கொடுப்பனவுகளை வழங்கும் முறைமை, சமூகப் பதிவு (*Social Registry*) போன்ற இலங்கையின் அபிவிருத்திக் கொள்கைக்கான செயற்பாட்டுத் திட்டத்தினை முழுமையாக்குவதற்கு அவசியமான எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் அவற்றுக்கு அவசியமான காலஎல்லை என்பன தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது, இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை முன்னெடுப்புகளுக்கு உலக வங்கி வழங்கும் ஒத்துழைப்புக்கு பாராட்டுத் தெரிவித்த சாகல ரத்நாயக்க, இந்த வேலைத் திட்டத்தை சாத்தியமாக்கிக்கொள்வதற்கு அனைவரினதும் ஒத்துழைப்புகளை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

உலக வங்கியின் இந்நாட்டுக்கான முகாமையாளர் சியோ கன்தா உள்ளிட்ட உலக வங்கி பிரிதிநிதிகளும் பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க உள்ளிட்ட அதிகாரிகளும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டிருந்தனர்.




## பாவமன்னிப்பின் முக்கியத்துவம்

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் பாவங்கள் இரு வகையாக நோக்கப்படுகின்றன. அவை சிறிய பாவங்கள், பெரிய பாவங்கள் எனப்படும். என்றாலும் இப்பாவங்களில் கால, இட சூழ்நிலைகளுக்கு ஏற்ப பெரும்பாவங்களாகவும் சிறிய பாவங்களாகவும் மாறக்கூடியவை உள்ளன. அதேநேரம் பாவங்களின் தன்மையைப் பொறுத்து அவை ஒழுங்கைமைப்பை பெற்றுள்ளன.

அந்த வகையில் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் 'பாவத்தில் பிடிவாதமாக தொடர்ந்திருத்தல். சிறிய பாவத்தை நினைத்து சந்தோஷமடைதல், பாவத்தை சிறிதாகக் கருதுதல், பாவத்தை செய்பவர் பின்பற்றப்படுகின்ற ஆலிமாக இருத்தல் என்பவை சாதாரண பாவங்கள் பெரிய பாவங்களாக மாறிவிடுவதற்கு காரணமாய் அமைந்துவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

'ஒரு முஃமின் ஒரு பாவத்தை செய்தால் பெரிய மலையொன்று தலையில் விழுந்து விட்டது போன்று நினைப்பான் ஆனால் பாவிகளும் நயவஞ்சகர்களும் ஒரு கொசு வந்து முகத்தில் நின்றுவிட்டது போன்று உணர்வர்' என்பது இப்னு மஸ்உத் (ரழி) அவர்களின் கூற்றாகும்.

'வெளிப்படையில் அல்லாஹ்வின் நேசனாகவும் மறைவில் அல்லாஹ்வின் எதிரியாகவும் இருக்காதே' என்று பிலால் இப்னு ஸஃத் (ரழி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

'அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவது கண்ணியமாகும் அவனுக்கு மாறு செய்வது இழிவாகும்' என்றும் 'பாவம் சிறியது என்று நினைக்காதே அதனை யாருக்கு எதிராக செய்துள்ளாய் என்பதை பார்' என்றும் இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதேவேளை இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் 'பிடிவாதம் காரணமாக சிறிய பாவம் பெரிதாகிவிடும். இஸ்திஃபார் காரணமாக பெரிய பாவம் சிறிதாகிவிடும்' என்றுள்ளார்கள்.

'பாவத்தின் சுவையில் இருப்பவன் பொடுபோக்கின் மயக்கத்தில் இருக்கிறான்' என்று இமாம் இப்னுல் ஜவ்ஸி (ரஹ்) அவரகள் கூறியுள்ளார்கள்.

இவ்வாறு பாவங்கள் தொடர்பில் ஆழ அகலமாக நோக்கியுள்ள இஸ்லாம் அதற்கு பாவமன்னிப்பை தேடிக்கொள்வதற்கான ஒழுங்கையும் வழிகாட்டல்களையும் வழங்கியே இருக்கின்றது. அந்த வகையில் பாவமன்னிப்புக்கான சிறந்த காலப்பகுதியில் ஒன்றாக விளங்கும் ரமழான் மாத நோன்பு காலப்பகுதியில் பாவமன்னிப்பு தேடிக்கொள்வதில் உச்சளவு முயற்சிகளை மேற்கொள்வோம்.

அஷ் ஷெய்க்
**யூ.கே றமீஸ்...**
எம்.ஏ. (சமூகவியல்)

## ஊடகவியலாளர்கள் – சிவில் சமூக அமைப்பு பிரதிநிதிகளிடையே புரிந்துணர்வு செயற்றிட்டம் ஆரம்பம்

**அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**



எழுத்தாணி கலைப் பேரவையினால் முன்னெடுக்கப்படும் ஊடகவியலாளர்களுக்கும் சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வும் தொடர்பாடலையும் ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு, திருகோணமலை அலஸ் தோட்டத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

எழுத்தாணி கலைப் பேரவையின் தலைவர் வடமலை ராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்கிரம பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் சிவில் சமூக அமைப்புகளான மாவட்ட பெண்கள் சமாசத்தின் பிரதிநிதிகள் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருடன் உள்ளூரில் ஊடகவியலாளர்களுடன்

06

100 மில். டொலர் இந்திய கடனுதவியில்

## அரச கட்டடங்களுக்கு சூரிய மின்னுற்பத்தி கட்டமைப்புகள்

சூரிய மின்னுற்பத்திக் கட்டமைப்புகளை (சோலார்) பொருத்துவதற்கான அரச கட்டடங்கள் மற்றும் மத வழிபாட்டுத்தளங்கள் உள்ளிட்டவற்றை அடையாளம் காணும் பணிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி நிறைவடையுமென, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் 100 மில்லியன் டொலர் கடனுதவியின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும்

06



## தென்கொரிய தூதுவர் – ஜனாதிபதி சந்திப்பு



பதவிக்காலத்தை நிறைவு செய்த பின்னர் நாடு திரும்பும் இலங்கைக்கான தென்கொரியத் தூதுவர், ஜொன்ங் வூன்ஜின் (*Jeong Woonjin*), ஜனாதிபதி அலுவலகத்தில் (06) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார்.

தான் நாடு திரும்புவதை ஜனாதிபதிக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்ததுடன், சிநேகபூர்வ கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

ஜொன்ங் வூன்ஜின் (*Jeong Woonjin*), தனது பதவிக்காலத்தில் இலங்கைக்கு வழங்கிய ஆதரவைப் பாராட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரின் எதிர்கால பணிகள் வெற்றியடைய வாழ்த்துகளைத் தெரிவித்தார். இந்த சந்திப்பில் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ருவன் விஜயவர்தனவும் கலந்துகொண்டார்.

ஜொன்ங் வூன்ஜின் கடந்த 2020ஆம் ஆண்டு ஜூலை 02ஆம் திகதி முதல் இலங்கைக்கான தென்கொரியத் தூதுவராகப் பணியாற்றி வந்தார்.

## அலரி மாளிகைக்கு முன்பாக சொகுசு காரென்று விபத்து



கொள்ளுப்பிட்டி அலரி மாளிகைக்கு முன்பாக சொகுசு காரொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையே இந்த விபத்துக்குக் காரணமென, பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்தின் போது, காரில் பயணித்த எவருக்கும் காயம் ஏற்படவில்லையெனவும், பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து தொடர்பில் காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கந்தளாய்–அக்போபுர பகுதியில் உதயதேவி ரயில் தடம்புரள்வு




**றொட்டவெவ குறூப் நிருபர்**

கந்தளாய், அக்போபுர பகுதியில் உதயதேவி சரக்கு ரயில் தடம் புரண்டதில் 17 பேர் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று(07) மதியம் 12.55 மணியளவில் இடம்பெற்றது.

கல்ஓயாவில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த போதே, உதயதேவி ரயில் தடம் புரண்டது. அக்போபுர பகுதியில் வைத்து மூன்று பெட்டிகள் தடம் புரண்டு விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

விபத்தில் உதவிக் கட்டுப்பாட்டாளர் உட்பட 16 பேர் படுகாயமடைந்துள்ளனர். விபத்தில் படுகாயமடைந்த 17 பேரும் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் மூன்று ஆண்களும், ஒரு சிறுவனும் அடங்குவதாக, வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார். விபத்து தொடர்பிலான விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தனியார் பஸ்–மாட்டுவண்டிகளுடன் மோதி விபத்து; நால்வர் காயம்

அநுராதபுரம் தந்திரிமலை ஏரிக்கரையில் நேற்று (07) தனியார் பஸ் ஒன்று ஐந்து மாட்டுவண்டிகளுடன் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் நால்வர் காயமடைந்து அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் ஒரு சிறு குழந்தையும் அடங்குவதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரிலிருந்து புத்தளம் நோக்கி இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக பயணித்த தனியார் பஸ், மடு நோக்கிச் சென்று கொண்டிருந்த 5 மாட்டு வண்டிகளுடன் மோதி விபத்துக்குள்ளானதாக, பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் நான்கு மாடுகளும் காயமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பஸ் சாரதியின் கவனயீனம் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## யானையால் அடித்து சிதைக்கப்பட்ட சடலம் சிங்கராஜ காட்டிலிருந்து மீட்பு



**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

சிங்கராஜ வனத்தில் யானை ஒன்றினால் தாக்கி சிதைக்கப்பட்ட வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.இறந்தவரின் சடலம், சிங்கராஜ வனத்துக்கு அண்மித்த மாணிக்கவத்த பிரதேசத்தில் வசித்து வந்த 72 வயதான வயோதிபரினுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளதாக, சிங்கராஜ வனப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தனது இருப்பிடத்திலிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பிட்டுகந்த வனப்பகுதியில் இவர் இரண்டு ஏக்கர் அளவிலான காணியில் தேயிலைத் தோட்டம் செய்து வந்ததாகவும் தேயிலை தோட்டத்துக்குச் சென்றவர் திரும்பி வராததால் அவரது தொலைபேசிக்கு அழைப்பு எடுத்த போதிலும் பதில் கிடைக்காததால் அவரது குடும்பத்தினர் அவரைத் தேடி வனப்பகுதிக்கு சென்ற போது பற்றைக்காட்டுப் பகுதியில் இவரது சடலம் யானையால் மிதித்து சிதைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது.

### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 211.25 | 225.29 |
| கனடியன் டொலர் | 232.02 | 247.26 |
| யூரோ | 340.65 | 360.74 |
| ஜப்பான் யென் | 2.3550 | 2.4949 |
| சிங்கப்பூர் டொலர் | 235.13 | 249.76 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 388.11 | 410.28 |
| சுவிஸ் பிராங்க் | 340.65 | 364.37 |
| அமெரிக்க டொலர் | 313.37 | 330.50 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 858.78 | கட்டார் ரியால் | 88.53 |
| குவைத் டினார் | 1,055.52 | சவூதி ரியால் | 86.32 |
| ஓமான் ரியால் | 840.95 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 88.15 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 25ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரமழான் பிறை 16

### குறள் தரும் சிந்தனை



உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்

*பயனை எண்ணிப்பார்த்து அதற்காகவே நட்புக் கொள்பவரும், விலைமகளிரும், கள்வரும் ஆகிய இந்த மூவரும் ஒரே மாதிரியானவர்களே ஆவார்கள்.*

# நெருக்கடியிலிருந்து மீளும் வரை மக்கள் பொறுமை காக்க வேண்டும்

இலங்கையில் பொருளாதார நெருக்கடி படிப்படியாக முடிவுக்கு வந்துவிடுமென்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. நெருக்கடிக்குத் தீர்வு கிடைக்குமென்பதற்கான நம்பிக்கைகளில் ஒன்றாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவி நோக்கப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவி ஊடாக இலங்கைக்கு மேலும் பல உதவிகள் கிடைப்பதற்காக வாய்ப்புகள் உள்ளன என்று பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அதாவது பொருளாதார நெருக்கடியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள எமது நாடு மீட்சி பெறுவதற்கான சிறந்ததொரு ஆரம்பப் புள்ளியாக சர்வதேச நாணய நிதியத்தின் அறிவிப்பை நோக்க முடியும் என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கு முன்னதாக இலங்கையின் முன்னைய கடன் வழங்குனர்கள் அனைவரையும் கடன்மறுசீரமைப்புக்கு இணங்கச் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை முன்வைக்கப்பட்டமை நினைவிருக்கலாம். இந்நிபந்தனையை வெற்றி கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், அவரது தலைமையிலான அரசாங்கமும் மேற்கொண்ட தொடர் முயற்சிகளுக்குக் கிடைத்துள்ள வெற்றியே ஐ.எம்.எப் இன் அறிவிப்பாகும்.

இலங்கை வங்குரோத்து நிலைமைக்குச் சென்றுவிட்டதாக சர்வதேசமே கணித்துவிட்ட பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்காக தொடர்ந்து போராடிய அரசுக்கு கிடைத்திருப்பது உண்மையிலேயே குறிப்பிடும்படியான வெற்றியாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிப் பொதியானது இலங்கைக்கு வழங்கப்படும் என்ற உறுதிமொழி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருப்பதனால் இலங்கை பொருளாதார மீட்சிக்குச் செல்வதற்கான நம்பிக்கைகள் தோன்றியுள்ளன.

இந்தக் கடனுதவியின் கீழ் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து எதிர்வரும் 48 மாதங்களில் 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியாக இலங்கைக்கு வழங்கப்படவிருக்கின்றது. அது மாத்திரமன்றி சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து 7 பில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான நிதியை இலங்கை கோருவதற்கான வாய்ப்பும் இதன் மூலம் கிடைத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவி கிடைக்குமென்பதில் எதிரணியினர் எதிரான விமர்சனங்களையே தெரிவித்து வந்தனர். சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இலங்கைக்குக் கிடைப்பது பகல் கனவு என்றெல்லாம் எதிரணியினர் கூறி வந்தனர். ஆனால் எதிரணியினரின் விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இலங்கைக்குக் கிடைக்கவிருக்கின்றது.

மக்களை ஏமாற்றும் விதத்தில் புனைகதைகளைக் கூறி வருகின்ற எதரணியினர் இனிமேல் இது பற்றி எவ்வாறான விமர்சனங்களை முன்வைக்கப் போகின்றார்களென்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

அதேசமயம், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண்டிருந்த உறுதியான நிலைப்பாடும் அவர் மேற்கொண்ட முயற்சிகளும் பாராட்டப்பட வேண்டியவையாகும்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் உதவியானது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான ஒரு ஆரம்பம்தான் என்பதை மறந்து விடலாகாது. நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்காக சர்வதேச நாணய நிதியத்துக்கு இலங்கையினால் உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருப்பதையும், அவை நிறைவேற்றப்பட வேண்டுமென்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

வரிக் கொள்கை மறுசீரமைப்பு, ஊழல் எதிர்ப்புச் சட்டங்களை வலுப்படுத்தல், மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்தல், நஷ்டத்தில் இயங்கும் அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைத்தல், கொடுக்கல் வாங்கல்களில் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் அவற்றுக்குத் தேவையான சட்டரீதியான திருத்தங்களைக் கொண்டு வருதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

இலங்கைக்குக் கிடைக்கவுள்ள நீடிக்கப்பட்ட கடன் வசதியானது கட்டம் கட்டமாக வழங்கப்படுவதாகும். ஒவ்வொரு கட்டமும் கடன் வழங்கப்படும்போது இலங்கையின் முன்னேற்றம் குறித்த மதிப்பாய்வு மேற்கொள்ளப்படும்.

நிபந்தனைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் அடுத்தடுத்த தவணை கடன் தொகையைப் பெறுவதில் நெருக்கடி ஏற்படுவதற்கு இடமுண்டு. எனவே இலங்கை கடைப்பிடிக்க வேண்டிய அல்லது மேற்கொள்ள வேண்டிய மறுசீரமைப்புகள் ஏராளம் காணப்படுகின்றன. அரசாங்கம் படிப்படியாக அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டியிருக்கின்றது. இந்த விடயத்தில் மக்கள் பொறுமை காக்க வேண்டியது அவசியமாகும்.

நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு இப்போது கிடைத்திருக்கும் அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள அனைத்து மக்களும் முன்வருதல் கட்டாயமாகும்.

editor.tkn@lakehouse.lk

# வனத்தினுள் அமைந்துள்ள வேலோடுமலை முருகன் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம்

'ஈழத்து பழனி' என அழைக்கப்படும் சித்தாண்டி வேலோடுமலை முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழாவின் இறுதி நாள் தீர்த்தோற்சவம் கடந்த 05 ஆம் திகதி புதன்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு சித்தாண்டி கிராமத்திலிருந்து மேற்காக 14 கிலோ மீட்டர் தொலைவில் காடும் மலையும் சூழ்ந்த மனோரம்மியமான சூழலில் இந்த வேலோடுமலை முருகன் ஆலயம் அமைந்துள்ளமை பலரையும் ஈர்க்கிறது.

தொடர்ச்சியாக ஆறு நாட்கள் ஆயிரம் அடியார்களுடன் இடம்பெற்று வந்த திருவிழா ஏழாம் நாள் புதன்கிழமை ஆலய தர்மகத்தா சுப்ரமணியம் தியாகராஜா முன்னிலையில் கோலாகலமாக நடைபெற்றது.

பிரதமகுரு சிவஸ்ரீ கு.க. அரவிந்தக்குருக்கள் தலைமையில் நேற்றுமுன்தினம் காலை பத்து மணியளவில் மலையடிவாரத்திலுள்ள தீர்த்தக் கிணற்றில் தீர்த்தோற்சவம் இடம்பெற்றது.





கடந்த மூன்று ஆண்டுகளில் மிகவும் சிறப்பாக இம்முறை தீர்த்தம் இடம்பெற்றது.

ஆலய தர்மகத்தா சுப்ரமணியம் தியாகராஜா, துணைவியார் சந்திரா தியாகராஜா, சித்தர்கள் குரல் அமைப்பின் சார்பில் ஆலய பரிபாலன சபை ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா, உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன், ஆலய பிரமுகர்களான வேல்சாமி, முரளி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பூஜைகளிலும் தீர்த்த கிரியைகளிலும் கலந்து சிறப்பித்தனர். வள்ளி, தெய்வானை சமேத முருகப் பெருமான் அலங்கார தேர்களில் விநாயகர் சகிதம் ஆரோகணித்து நாதஸ்வரம் மேளதாளத்துடன் வலம் வந்து தீர்த்தமாடினார்.

கிழக்கின் பல பாகங்களிலும் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்திற்கு வந்து திருவிழாக்களிலும் தீர்த்தோற்சவத்திலும் கலந்து கொண்டனர்.





தீர்த்தோற்சவத்தின் நிறைவில் ஆலயத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது.

சித்தாண்டி, மாவடிவேம்பு, கொம்மாதுறை, தேவபுரம், கோரளங்கேணி, வந்தாறுமூலை பிரதேச மக்கள் மற்றும் ஆலயதிருவிழா குழுவினரால் இந்த ஏழு நாள் திருவிழாக்கள் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

காரைதீவு குறூப் நிருபர்...

# மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி அதிபராக இப்றாலெப்பை உபைதுல்லாஹ்

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் புதிய அதிபராக இப்றாலெப்பை உபைதுல்லாஹ் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமையினை நேற்று (20230407) வெள்ளிக்கிமை பொறுப்பேற்றார். அதிபராகக் கடமையாற்றிய எம்.ஜே.அப்துல் ஹசீப் ஓய்வு பெற்றதையொட்டி இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முதலாந்தர அதிபரான இப்றாலெப்பை உபைதுல் லாஹ் ஆங்கில மொழியில் புலமை கொண்ட ஒருவர். மாணவர்களோடு மிகவும் நெருக்கமான உறவைப் பேணி சிறப்பாகக் கற்பிப்பதில் ஆளுமை கொண்ட நல்லாசான். ஆசிரியர்களுடன் நட்பைப் பேணி அனைவரையும் அரவணைத்துச் செல்லும் ஆற்றல் கொண்டவர்.

மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் அப்பாடசாலையின் கல்வி அபிவிருத்தியில் அதிக அக்கறை காட்டி சிறந்த பெறுபேறுகளுக்கு வழிகோலியவர். அது மாத்திரமன்றி பௌதீகவள அபிவிருத்தியிலும் அக்கறையுடன் செயற்பட்டு நல்ல அடைவு மட்டத்திற்கு வித்திட்டவர். பாடசாலையை அழகுபடுத்துவதில் கலை ரசனையோடு வித்தியாசமான சிந்தனையுடன் மற்றவர்கள் மனம் கவரும் வகையில் செயற்பட்டு பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் பாராட்டுக்களைப் பெற்றவர்.

இவர் மருதமுனையைச் சேர்ந்த இப்றாலெப்பை, உம்மு றசீனா தம்பதியின் புதல்வராக 19691020ஆம் திகதி மருதமுனையில் பிறந்தவர். ஆரம்பக்கல்வி முதல் இடைநிலைக் கல்வி வரை மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் கற்றவர். உயர் தரத்தில் கலைப்பிரிவில் கற்று சிறந்த பெறுபேற்றைப் பெற்று 9091ஆம் கல்வியாண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி தனது உயர்கல்வியைக் கற்று சிறப்பு கலைப் பட்டதாரியாக 1995ஆம் ஆண்டு வெளியேறினார். அக்காலப் பகுதியிலேயே ஆங்கில ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 'டெலிக்'பயிற்சினை 1995ஆம் ஆண்டு முடித்துக் கொண்டார்.



19970101ஆம் திகதி ஓர் ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று வரிப்பத்தாஞ்சேனை மஜீத்புர வித்தியாலயத்தில் கடமையேற்றார். அங்கு ஒரு வருட காலம் கடமையாற்றிய நிலையில் 19980101ஆம் திகதி மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று இங்கு கடமையேற்றார்.

இங்கு ஆங்கில ஆசிரியராக பன்னிரெண்டு வருடங்கள் சேவையாற்றினார். க.பொ.த.சாதாரண தர மற்றும் க.பொ.த.உயர் தர வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கில மொழியை மிகவும் சிறப்பாகக் கற்பித்து மாணவர்கள் மத்தியில் நற்பெயரைப் பெற்று மருதமுனைப் பிரதேசத்தின் ஆங்கில மொழி விருத்தியில் தொடர்ச்சியாக மிகக் கூடிய பங்களிப்பச் செய்து வருகின்றார்.

இவ்வாறான நிலையில் 2009ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடமாற்றத்தினால் மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்தில் கடமையேற்று கற்பித்தல் பணியை மேற்கொண்ட வேளையிலேயே இலங்கை அதிபர் சேவை தரம் 2 போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 20121003ஆம் திகதி அதிபர் சேவை 2ற்குள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு 2014ஆம் ஆண்டு நிரந்தர சேவைக்குள்ளாக்கப்பட்டு மேற்படி பாடசாலையிலேயே பிரதி அதிபராகப் பொறுப்பெற்றார்.

இவர் 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா மற்றும் 2008ஆம் ஆண்டு இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் ஆங்கில மொழியில் டிப்ளோமா கற்கையையும் பூர்த்தி செய்துள்ளார்.அத்துடன் தேசிய கல்வி நிறுவகத்தில் பாடசாலை முகாமைத்துவத்தில் டிப்ளோமா சிறப்புச் சித்தியையும் பெற்றுள்ளார்.

மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய நிலையில் 20190318 ஆம் திகதி அதிபராக நியமனம் பெற்றிருந்தார்.

பி.எம்.எம்.ஏ.காதர்...
(மருதமுனை தினகரன் நிருபர்)

# திறப்பனையில் கோழிமுட்டை சேமிப்பு நிலையம் ஆரம்பம்

கோழிமுட்டை சேமிப்பு வசதிகளை விருத்தி செய்யும் நோக்கில் திறப்பனை விலங்குகள் நல பண்ணை மற்றும் நடைமுறை பயிற்சி நிலையத்தில் கோழி முட்டை சேமிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வருடமொன்றிற்கு இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான கோழிக்குஞ்சுகளை பெற்றுக் கொள்ள வாய்ப்புள்ளது. ஒரு தடவையில் 16000 முட்டைகளை சேமித்து வைக்க வாய்ப்புள்ளது. 21 நாட்களில் கோழிக் குஞ்சுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கு மேலதிகமாக திறப்பனை விலங்குகள் நல பண்ணை மத்திய நிலையத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சேதனப்பசளை திட்டத்தினை மாகாண ஆளுநர் பார்வையிட்டுள்ளார். நவீன இயந்திரங்களை உபயோகித்து மேற்கொள்ளப்பட்டுவரும் இச்செயற்திட்டத்திற்கு 14 இலட்சம் ரூபா நிதி வடமத்திய மாகாண விலங்குகள் உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மூலம் செலவிடப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் கே.எம்.யூ.எம்.அமரசிங்ஹ தெரிவித்தார்.







குறித்த. சேதனப் பசளை திட்டத்தை மிகவும் வெற்றிகரமான விதத்தில் மேற்கொண்டு செல்ல வேண்டுமென ஆளுநர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இருந்த போதும் இந்த மத்திய நிலையத்தை பராமரிப்பதற்கு அங்கு பணியாளர் பற்றாக்குறை இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. தற்போது நிரந்தர சேவையில் ஆறு தொழிலாளர்களும் விலங்குகள் அபிவிருத்தி ஆலோசகர்களாக மூவரும் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஐவரும் சேவையில் ஈடுபட்டுள்ளனர். எதிர்காலத்தில் சேவையாளர்களின் குறைபாட்டினை நிவர்த்தி செய்யவும் மத்திய நிலையத்தில் அடிப்படை வசதிகளை மேற்கொள்வது தொடர்பிலும் ஆளுநர் கவனம் செலுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எம். ரி. ஆரிப்...

# தமிழ்நாடு அமைச்சரவையில் நிகழவிருக்கும் அதிரடி மாற்றம்!

தமிழ்நாடு அமைச்சரவையில் மேலும் சில மாற்றங்கள் எதிர்வரும் நாட்கள் செய்யப்படும் என்று தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி சிறிய அளவிலான மாற்றங்கள் எதிர்வரும் நாட்களில் செய்யப்பட உள்ளதாகவும், இலாகா அளவில் மாற்றம் இருக்கும் என்றும் கூறப்படுகிறது.



கடந்த வருட இறுதியில் தமிழ்நாடு அமைச்சரவையில் பெரும் எதிர்பார்ப்பிற்கு இடையில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டன. முதல்வர் ஸ்டாலினின் ஒரு இலாகாவையும் சேர்த்து மொத்தமாக 11 அமைச்சர்களின் இலாகாக்கள் மாற்றப்பட்டுள்ளன.

உதயநிதி ஸ்டாலினுக்கு இளைஞர் நலன், விளையாட்டுத்துறை வழங்கப்பட்டது. அதேபோல் சிறப்பு திட்ட செயலாக்கம் துறை வழங்கப்பட்டது.

உதயநிதி ஸ்டாலின் அமைச்சர் ஆனது மட்டுமின்றி மட்டுமின்றி பல சீனியர் அமைச்சர்களின் துறைகளும் மாற்றப்பட்டன. ஐ பெரியசாமி, ராஜகண்ணப்பன், முத்துசாமி, பெரியகருப்பன், சேகர் பாபு, ராமசந்திரன், காந்தி, பிடிஆர், மெய்யநாதன், மதிவேந்தன் ஆகியோரின் இலாகாக்கள் மாற்றப்பட்டுள்ளன.

இந்த நிலையில்தான் தமிழ்நாடு அமைச்சரவையில் மேலும் சில மாற்றங்கள் எதிர்வரும் நாட்கள் செய்யப்படும் என்று தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி சிறிய அளவிலான மாற்றங்கள் வரும் நாட்களில் செய்யப்பட உள்ளதாகவும், இலாகா அளவில் மாற்றம் இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

அவர்கள் மீது உள்ள புகார், 2024 லோக்சபா தேர்தல் என்று பல விஷயங்களை மனதில் வைத்து இந்த அமைச்சரவை இலாகா மாற்றங்கள் செய்யப்பட உள்ளன. முக்கியமான சில துறை ரீதியான மாற்றங்கள் நடக்கும் என்று கூறப்படுகிறது. கடந்த முறை அமைச்சரவை மாற்றத்தின் போது உயர் இலாகா எதிலும் மாற்றம் செய்யப்படவில்லை. அமைச்சர்கள் துரைமுருகன், கே என் நேரு, அன்பில் மகேஷ், பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், தங்கம் தென்னரசு, ஏவ வேலு, எம் ஆர்கே பன்னீர்செல்வம், ரகுபதி, செந்தில் பாலாஜி, மா சுப்பிரமணியன், சேகர் பாபு ஆகிய 11 அமைச்சர்களின் பதவிகளில் எந்த மாற்றமும் இல்லை. அவர்களின் துறைகள் மாற்றப்படவில்லை. ஆனால் இந்த முறை உயர் இலாகாக்களில் கூட சில முக்கியமான மாற்றங்கள் செய்யப்படலாம். சில அமைச்சர்களின் தலைகள் உருளலாம் என்று தமிழ்நாடு கோட்டை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

# காங்கேசன்துறை-காரைக்கால் கப்பல் சேவை;

# இலங்கை–இந்திய நாடுகளுக்கிடையே உறவுகள் மேலும் வலுவடையும் வாய்ப்பு





## இருநாட்டு சுற்றுலாத்துறை, வர்த்தகத்துக்கான புதிய பாதை திறக்கப்படுமென்று நம்பிக்கை







இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான பயணிகள் கப்பல் சேவை(Ferry Service) விரைவில் ஆரம்பமாகப் போகின்றதென்பது மகிழ்ச்சியான செய்தியாகும். இதுவரை வெளியான அறிவிப்புகளின்படி இலங்கை தமிழ்நாடு பயணிகள் கப்பல் சேவையானது இம்மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகவிருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கையும் இந்தியாவும் பண்டைக்காலம் தொடக்கம் வர்த்தக, கலாசார மற்றும் சமயரீதியாக மிகவும் நெருக்கமான பிணைப்பைக் கொண்டுள்ள நாடுகள் ஆகும். இருநாடுகளுக்குமிடையேயான பயணத் தொடர்புகள் மிகவும் நெருக்கமானவையாகும்.

இலங்கை மக்கள் இந்தியா செல்வதும், இந்திய மக்கள் இலங்கைக்கு வருகை தருவதும் மிகச் சாதாரணமாகவே இடம்பெற்று வருகின்ற நிகழ்வுகளாகும். இந்நிலையில் இலங்கை இந்திய பயணிகள் கப்பல் சேவையானது இருநாடுகளுக்குமிடையே போக்குவரத்துத் தொடர்புகளை மென்மேலும் அதிகரிப்பதற்கு வழியமைக்குமென்றே நம்பப்படுகின்றது.

இருநாடுகளும் தத்தமது சுற்றுலாத்துறையை மேம்படுத்திக் கொள்வதற்கும், வர்த்தகத் தொடர்புகளை அதிகரித்துக் கொள்வதற்கும் இலங்கை–இந்திய பயணிகள் கப்பல் சேவையானது மிகவும் வாய்ப்பை வழங்குமென்று நம்பப்படுகின்றது.

அதுமாத்திரமன்றி இந்தியாவிலிருந்து பெருமளவு யாத்திரிகர்கள் இலங்கையிலுள்ள சமயத்தலங்களைத் தரிசிப்பதற்காக வந்து செல்கின்றனர். நுவரெலியாவிலுள்ள சீதையம்மன் ஆலயம், றம்பொடை ஆஞ்சநேயர் ஆலயம் போன்றவை இந்தியாவில் உள்ள இந்துக்களால் மிகவும் போற்றி மதிக்கப்படுகின்ற ஆலயங்களாகும்.

மேற்படி ஆலயங்களைத் தரிசிப்பதற்காக இந்தியாவின் பல்வேறு பாகங்களிலுமிருந்து யாத்திரிகர்கள் வருகின்றனர். இவ்வாறான யாத்திரிகர்கள் இனிமேல் அதிக போக்குவரத்துக் கட்டணம் செலுத்தி விமானத்தில் பயணம் செய்ய வேண்டியதில்லை. தமிழ்நாட்டுக்கு தரை வழியாக வந்து, அங்கிருந்து பயணிகள் கப்பலில் குறைந்த செலவில் இலங்கைக்கு வருகை தர முடியும். அவர்கள் யாழ்ப்பாணத்தின் சுற்றுலாப் பிரதேசங்களையும் பார்வையிட முடியும்.

அதேபோன்று இலங்கையிலிருந்தும் இந்திய சுற்றுலாவுக்காகவும், அங்குள்ள சமயத் தலங்களைத் தரிசிப்பதற்காகவும் பெருமளவு பயணிகள் செல்கின்றனர். அவர்கள் இனிமேல் விமானத்துக்காக அதிக கட்டணம் செலுத்தாமல், பயணிகள் கப்பல் சேவையையே பயன்படுத்திக் கொள்ள இயலும்.

ஆகவே இலங்கை– இந்திய பயணிகள் கப்பல் சேவையானது இருநாடுகளின் சுற்றுலா, வர்த்தகம், கலாசார பரிவர்த்தனை போன்ற பல்வேறு துறைகளில் பெருமளவு உதவுமென்றே நம்பப்படுகின்றது.

இலங்கை இந்தியா இடையேயான பயணிகள் கப்பல் சேவை குறித்த புதிய அறிவிப்பை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அண்மையில் வெளியிட்டிருந்தார்.

“தென்னிந்தியாவின் காரைக்கால் பகுதியில் இருந்து காங்கேசன்துறைக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 29ஆம் தேதி முதல் பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கும். மேலும் கப்பலில் பயணிக்கும் ஒவ்வொரு பயணியும் தலா 100 கிலோ பொருட்கள் வரை எடுத்துச் செல்ல இயலும்.

அது மட்டுமல்லாமல் இந்த சேவையைத் தொடங்க இரு நாட்டைச் சேர்ந்த எந்த ஒரு பயணிகள் கப்பல் நிறுவனமும் முன் வரலாம்” என்று அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும் இது தொடர்பாக இலங்கை போக்குவரத்து அமைச்சு தகவல் தெரிவிக்கும் போது “இந்தியா இலங்கை இடையேயான பயணிகள் கப்பல் போக்குவரத்திற்கு ஏதுவாக காங்கேசன்துறை பகுதியில் ஒரு பயணிகள் கப்பல் தளத்தை இலங்கை கடற்படை நிர்மாணித்து வருகின்றது. இதனால் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு சுமார் 4 மணி நேரத்தில் கப்பல் மூலம் மக்கள் பயணிக்கலாம்” எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த பயணிகள் கப்பல் சேவையானது இருநாட்டு மக்களாலும் மிகவும் ஆர்வமாக எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கைக்கு சுற்றுலாத்துறை ஊடாக வருமானத்தை ஈட்டித் தருவதற்கு மேற்படி பயணிகள் கப்பல் சேவையானது வாய்ப்பை வழங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

காங்கேசன்துறை துறைமுகத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடற்படையின் ஒத்துழைப்புடன் புதிய பயணிகள் முனையம் நிர்மாணிக்கப்படுகின்றது.

ஒரே தடவையில் சுமார் 150 பயணிகள் ஒரு கப்பலில் பயணிக்க முடியும். பயண நேரம் சுமார் 4 மணித்தியாலங்கள் ஆகும்.

ஒரு முறை பயணிப்பதற்காக பயணி ஒருவரிடமிருந்து 50 அமெரிக்க டொலர் அறவிடப்படும். ஒரு பயணிக்கு அதிகூடியதாக 100 கிலோ பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படும் என்று நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டிருந்தார்.

இருநாடுகளிடையே சமயயாத்திரைக்குச் செல்லும் மக்களுக்கும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களுக்கும் இந்த பயணிகள் கப்பல் சேவை பெரும் நிவாரணமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை கட்டணம் குறித்து கப்பல் உரிமையாளர்கள் முன்னர் கூறுகையில், ஒரு பயணிக்கான கட்டணம் 60 அமெரிக்க டொலர் என்று குறிப்பிட்டிருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது.

இதுபற்றிய அறிவித்தல் பின்னர் வெளியாகுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் பகல் வேளையில் மட்டுமே கப்பல் போக்குவரத்தை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 30 ஆண்டு காலத்துக்கு முன்னர் இவ்வாறான சேவை நடத்தப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் அச்சேவை இடைநிறுத்தப்பட்டது. 30 ஆண்டுகளுக்குப் பின்னர் பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் தொடங்குவதற்கான சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது.

"இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் புதிய பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் போது இரு நாடுகளுக்குமிடையிலான பாரம்பரிய தொடர்புகளை மீளமைக்க வழியேற்படும்" என நம்பப்படுகின்றது.

முன்னர் கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலும், தலைமன்னாருக்கும் இரமேஸ்வரத்துக்குமிடையிலுமாக இரு சேவைகள் இடம்பெற்று வந்தன. 1982 இல் உள்நாட்டுப் போர் காரணமாக இவை இடைநிறுத்தப்பட்டிருந்தன.

**எஸ். சாரங்கன்...**

# டெல்லியில் இடம்பெறும் முதலாவது பாவா காப்பக நிகழ்வில் Aitken Spence இன் Heritance Kandalama பங்கேற்பு

விருந்தோம்பல் நிறுவனமான Aitken Spence Hotels இன் தனித்துவம் பெற்ற உல்லாசவிடுதியான Heritance Kandalama, டெல்லி National Gallery of Modern Art (NGMA) இல் இடம்பெற்ற ‘Geoffrey Bawa: It is Essential to be There’ இல் முக்கிய இடத்தை வகித்தது. பாவாவின் கட்டட மற்றும் புகைப்பட நிறுவல் என்பவை இடம்பெற்றதுடன் பாவாவின் காப்பகங்கள் மற்றும் நடைமுறைகளை காட்சிப்படுத்தி, அதன் மூலம் ஊக்கத்தையும் உருவாக்கிடும் ஓர் கண்காட்சியாக இது விளங்குவதுடன், இவ்வகையிலான முதலாவது கண்காட்சியாகவும் இது சிறப்பு பெறுகிறது.


“வெப்பமண்டல நவீனத்துவத்தின் தந்தை” என அறியப்படும் உலகப் புகழ்பெற்ற கட்டடக்கலைஞரான தேசமான்ய ஜெஃப்ரி பாவா இலங்கையின் கட்டடக்கலை புத்துயிர் பெறக் காரணமாக இருந்தவர். மேலும் இவர், suave கோடுகள் மற்றும் நவீன உணர்வுகளை எமது உள்நாட்டு பாரம்பரியங்கள் மற்றும் அதன் துடிப்புமிக்க அம்சங்களுடன் உள்ளடக்கியே தமது கலைப்படைப்புகளை உருவாக்கியுள்ளார். இக்கண்காட்சியானது 2023 மே மாதம் 7ஆம் திகதி வரை NGMA இல் இடம்பெறவுள்ளதுடன், இந்திய இலங்கை இராஜதந்திர உறவுகளின் 75 ஆவது ஆண்டுநிறைவையொட்டி அதை கொண்டாடிடும் வகையிலேயே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மேலும் பாவா காப்பகத்திலிருந்த 120 ஆவணங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டதுடன் அவற்றில் பெரும்பான்மையானவை இதற்கு முன்னர் பகிரங்கமாக காட்சிப்படுத்தப்பட்டவை அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் முதன்மை அனுசரணையாளராக Aitken Spence Hotel இன் Heritance Kandalama இனால் அழைப்பு வழங்கப்பட்டோருக்கு மாத்திரம் பிரத்தியேக நிகழ்வொன்று நடைபெறவுள்ளது. ஏப்ரல் 7ஆம் திகதி The Claridges இல் இடம்பெறவிருக்கும் இந்நிகழ்வில் இந்திய புகைப்படக்கலைஞரான தயாநிதா சிங் மற்றும் இலங்கையில் முன்னணி கட்டடக்கலைஞரும் பாவாவின் மாணவருமான சன்னா தஸ்வத்தே ஆகியோருக்கிடையில் ஓர் கலந்துரையாடலும் இடம்பெறவிருக்கிறது.

இலங்கையின் மிகவும் செழிப்பான மற்றும் செல்வாக்குமிக்க கட்டடக்கலைஞரின் பணி மற்றும் நடைமுறைகளில் பெரிதும் செல்வாக்கு செலுத்துவதாக அமையும் இந்தக் கலந்துரையாடலானது இடைக்கால மற்றும் stoic குணங்களை ஆழமாக ஆராய்வதுடன் பாவா வடிவமைப்பை போற்றுவதாகவும் அமைந்திருக்கும்.

“எமது பழம்பெரும் கட்டடக் கலைஞரான தேசமான்ய ஜெஃப்ரி பாவாவின் பணியை உலகுக்கு எடுத்துச் செல்வதற்காக பாவா அறக்கட்டளையுடன் கூட்டிணைந்து இக்கண்காட்சியை நடாத்துவதையிட்டு நாம் பெருமையடைகின்றோம். அவரது வலிமைமிகு படைப்புக்களில் Heritance Kandalama என்பது இயற்கை மற்றும் நவீன வசதிகளின் ஒரு தனித்துவமான கலவையாகும். இந்த கண்காட்சியானது இளம் கட்டடக்கலை வல்லுனர்களுக்கு உலகின் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையிலான புதுமையான சிந்தனைகளை உருவாக்கிட ஊக்குவிக்கும் அதே வேளை அச்சிந்தனைகள் எமது உள்ளார்ந்த மரபுகள் மற்றும் விழுமியங்களை உணர்வுபூர்மாக பாதுகாப்பதாக அமையும் எனவும் நாம் நம்புகிறோம்” என Aitken Spence PLC பணிப்பாளர், சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு மற்றும் தலைவர் (Aitken Spence Hotel Management) செல்வி ஸ்டஷானி ஜயவர்தன தெரிவித்தார்.





புதுடெல்லி, தேசிய நவீன கலைக்கூடம் (NGMA), புதுடெல்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மற்றும் ஜெஃப்ரி பாவா அறக்கட்டளை ஆகியவை கூட்டிணைந்தே இக்கண்காட்சியை ஒழுங்குசெய்திருந்தன.

பாவாவின் தொலைநோக்கு வடிவமைப்புகளில் செயற்பாட்டுத்திறனுடன் சுற்றுச்சூழல் அழகியலை உள்ளடக்கியதாக இந்த நிர்மாணம் அமைந்துள்ளது. பயணிகளின் தேவையுடன் இயற்கையும் இணைந்ததாக மலைத்தொடரினை பின்பற்றி அமைந்த, Heritance Kandalama ஒரு பறவையின் இறகுகள் பறந்து விரிந்து இருப்பதைப் போல காட்சி தருகிறது.

இந்த Heritance Kandalama மற்றும் அதன் தனித்துவமான கதையை மையப்படுத்திய இக்கண்காட்சியானது பல சர்வதேச கலை மற்றும் வடிவமைப்பு ஆர்வலர்கள், அறிஞர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் உயர்மட்ட பிரமுகர்கள் என பலரை கவர்ந்ததுடன் அவர்களில் தாக்கத்தையும் செலுத்தியது.

Heritance Kandalama தொடர்பான மேலதிக விபரங்களுக்கு:

www.heritancehotels.com/kandalama

கண்காட்சி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு:

https://bawaexhibition.com/

# உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை மாணவர் நலன் கருதி திறன் வகுப்பறை







## அனைத்துலக மருத்துவ நல அமைப்பு மற்றும் இரட்ணம் பவுண்டேசன் நிதி அனுசரணை

யாழ் உடுவில் பிரதேசத்திலுள்ள மிகவும் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பயிலும் பாடசாலையாகிய உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் திறன் வகுப்பறையொன்று அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHOUSA, )மற்றும் இரட்ணம் பவுண்டேசன்(Ratnam FoundationUK)நிதி அனுசரணையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 68 மாணவர்களுடன் தரம் ஒன்று தொடக்கம் தரம் பதினொன்று வரையான வகுப்புக்களுடன் இயங்கும் இப்பாடசாலை மாணவர்களை வசதிகளுடன் கூடிய பாடசாலைகளில் பயிலும் ஏனைய மாணவர்களை ஒத்த வகையிலான கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் நோக்குடன் இவ்வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு அமைப்புக்களும் திறன் பலகைகளை இவ்வாறான பல பாடசாலைகளுக்கு வழங்கி வருவது மட்டுமல்லாது, குறித்த பாடசாலை ஆசிரியர்களை சிறந்த வளவாளர்களைக் கொண்டு பயிற்றுவிக்கும் அளப்பரிய செயற்பாடுகளையும் மேற்கொண்டுவருகின்றமைகுறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி இப்பாடசாலையில் திறன் வகுப்பறை அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலயத்தின் சார்பில் கணித பாட ஆசிரிய ஆலோசகர் ஆதித்தன் மற்றும் பெற்றோர் பலரும் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

இந்த ஆரம்ப வைபவத்தில் இப்பாடசாலை ஆசிரியர்களின் மாதிரி வகுப்பறைச் செயற்பாடுகள் இமமாணவர்கள் மீதான அவர்களின் அக்கறையை நேரில் வெளிப்படுத்தியதைக் காண முடிந்தது.

இதற்கான பாராட்டுக்களும் நன்றிகளும் விழாவில் கலந்து கொண்ட அனைவராலும் அதிபருக்கும் குறித்த ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்பட்டமை சிறப்பாக குறிப்பிட வேண்டிய அம்சமாக உள்ளது.

# கல்முனையில் சித்திரைப் புத்தாண்டு கிண்ண சுற்றுப் போட்டி ஆரம்பம்









மலரவிருக்கும் தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டை கிரிக்கட் உடன் வரவேற்பதற்காகவும், கல்முனைப் பிரதேச இளைஞர்களுக்கு இடையிலான நட்பு பாலத்தினை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடனும், புத்தாண்டு கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போட்டி தற்போது நடைபெற்று வருகிறது.

கல்முனையின் பாரம்பரியம் மிக்க பழைய தனியார் கழகங்களுடன் சில புதிய கழகங்களும் சேர்ந்து மொத்தமாக 07 அணிகள் பங்குபற்றும் இச்சுற்றுப் போட்டியின் அங்குரார்ப்பண வைபவம் கடந்த சனிக்கிழமை மாலை கல்முனை உவெஸ்லி மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை உவெஸ்லி பாடசாலை அதிபர் செ.கலையரசன் பங்கேற்றார். கௌரவ அதிதிகளாக கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்களான சந்திரசேகரம் ராஜன், கே. செல்வராஜா, தனு மற்றும் இச்சுற்றுத் தொடருக்கான கழகங்களின் உரிமையாளர்களான நிசேந்திரராஜ், சங்கீத், லோகராஜா, தேவதீசன், சுஜீந்தர், கோபு ஆகியோர் கலந்துகொண்டு ஆரம்ப நாள் நிகழ்வை வண்ணமயப்படுத்தி இருந்தார்கள்.

இம்மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில்DINESH 11 DOMINATORS, KIMA FIGHTERS, SHESHAN 11 LEOPARDS, VRK STALLIONS, KIRTHIK HAISNU BROS, RICH 11 TIGERS, VETRI VINAYAGAR ஆகிய ஏழு அணிகள் பங்குபற்றுகின்றன.

சித்திரைத் திருநாளில் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இடம் பெறும்.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# விபுலானந்த நாட்டிய நிருத்தியாலய குழுவினர்



உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 131 வது ஜனன தினத்தை முன்னிட்டு காரைதீவு விபுலானந்தா மணிமண்டபத்தில் அனைவரையும் கவர்ந்த நடன நிகழ்ச்சி கடந்த 27ஆம் திகதி ஜனன தின விழாவில் இடம்பெற்றது. அதில் பங்குபற்றிய விபுலானந்த நாட்டிய நிருத்தியாலய நடனக் கலைஞர்களையும் பக்கவாத்திய குழுவினரையும் காணலாம்.



புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள முந்தல் ஸ்ரீதிரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த சங்காபிஷேகம் வெள்ளிக்கிழமை(7)இடம்பெற்றது. இதன் போது அபிஷேகம்,சுவாமி உள்வீதி வலம் வருதல் போன்றவை இடம்பெற்றது.
(படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)

## நியுசிலாந்துக்கு பயணமான...

அந்த நாட்டு அரசாங்கத்தின் ஆவணங்களில் இலங்கையைச் சேர்ந்த 248 பேருடன் காணப்பட்ட மீன்பிடிப்படகை மீண்டும் காணவில்லையென குறிப்பிடப்பட்டுள்ளதாக, டிவிஎன்ஜட் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

2019ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் திகதி ஆட்கள் பயணிக்கும் படகாக மாற்றப்பட்ட 27 மீற்றர் ஆழ்கடல் மீன்பிடிப்படகு இந்தியாவிலிருந்து 248 தமிழர்களுடன் புறப்பட்டது. அந்தப் படகு, அவுஸ்திரேலியா அல்லது நியுசிலாந்தை சென்றடைய முயற்சி செய்திருக்கலமென, நியுசிலாந்து அரச ஆவணங்கள் தெரிவித்துள்ளன.

அதன் பின்னர், அந்தப் படகிலிருந்தவர்கள் தொடர்பாக எந்தத் தகவலும் இல்லையென, நியுசிலாந்தின் ஆவணங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பான விசாரணைகளின் போது, கைது செய்யப்பட்ட பிரபு தண்டபாணி என்ற நபர், குறிப்பிட்ட படகு நியுசிலாந்துக்கே சென்று கொண்டிருந்ததாக, இந்தியப் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

பெருமளவு எண்ணிக்கையிலானவர்கள் நியுசிலாந்துக்குள் நுழைவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடர்பான அந்த ஆவணங்களில், தமிழர்கள் கேரளாவிலிருந்து நியுசிலாந்து அல்லது அவுஸ்திரேலியாவுக்கு செல்வதற்கு மேற்கொண்ட முயற்சி தொடர்பாக காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியுசிலாந்துக்கு செல்ல முற்பட்ட இலங்கை அகதிகள் படகு தொடர்பாக டைம்ஸ் ஒவ் இந்தியாவில் வெளியாகியுள்ள கட்டுரையில், புதுடில்லியின் மதங்கீர் காலணியில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகளே இந்தப் படகில் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய இலங்கை உடன்படிக்கை காரணமாக இந்தக் காலணி உருவானது.

இந் த அகதிகள் மிக மோசமான நிலையில் வாழ்ந்ததாக இந்தக் கட்டுரையை எழுதிய கே.பி. சைகிரான் என்பவருக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர். தங்கள் பயணத்தை பாதுகாப்புத் தரப்பினர் கண்டுபிடிப்பதைத் தவிர்ப்பதற்காக 25 நாட்கள் நீடித்த படகுப் பயணத்தின் போது, அவர்கள் ஜி.பி.எஸ். சாதனங்களை பயன்படுத்துவதை தவிர்த்துள்ளனர்.

இந்தப் படகு நீரில் மூழ்கியிருக்க வேண்டும் அல்லது இலங்கை அதிகாரிகள் இவர்களை கைது செய்திருக்க வேண்டும். இதனால் அவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கலாமென, ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும், அவர்கள் உயிரிழந்திருக்கலாமெனவும், அவர் தெரிவித்துள்ளார்.

## அரச கட்டடங்களுக்கு சூரிய... (03ஆம் பக்கத் தொடர்)

செயற்றிட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக மீளாய்வு செய்வதற்கான கூட்டம் வெள்ளிக்கிழமை (07) மின்சக்தி அமைச்சில் நடைபெற்றது.

இக்கூட்டம் தொடர்பில் செய்துள்ள டுவிட்டர் பதிவிலேயே அமைச்சர் இதனைக் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய தேசிய பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழிநுட்பக் கல்லூரிகள், ஏனைய கல்வி நிலையங்கள், ஆயுதப்படைக் கட்டடங்கள், பொலிஸ் நிலையங்கள், மத வழிபாட்டுத்தளங்கள் மற்றும் ஏனைய அரச கட்டிடங்கள் என்பன தொடர்பில் 90 வீதமான கணக்கெடுப்புகள் இதுவரையில் நிறைவடைந்துள்ளன.

எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் இக்கணக்கெடுப்புப் பணிகள் நிறைவடையவுள்ளன. அத்தோடு, இந்திய எக்ஸிம் வங்கியினால் இதற்கான விலைமனுக் கோரல் மற்றும் கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

## சமுர்த்தி கொடுப்பனவை அதிகரித்து...

இடம்பெற்றுள்ளதாக, அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இந்த நபர், கோப்பாய் பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்ரென தன்னை அறிமுகப்படுத்தியுள்ளார்.

தனிமையில் வசிக்கும் அந்தப் பெண் தையல் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்துள்ளார்.

இதன்போது, தங்களுக்கு தற்போது வழங்கப்படும் சமுர்த்தி உதவித் தொகையை அடுத்துவரும் மாதங்களில் அரசினால் இரட்டிப்பாக வழங்கவுள்ளதாக அப்பெண்ணிடம் இந்த நபர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்காக தாம் ஒவ்வொரு சமுர்த்திப் பயனாளிகளிடமிருந்தும் 20 ஆயிரம் ரூபா பணத்தை அறவிடுவதாகத் தெரிவித்த அந்த நபர், நான்கு படிவங்களைக் கொடுத்து அதில் கையொப்பமிட்டு வழங்குமாறு கூறியுள்ளார்.

தன்னிடம் தற்போது அவ்வளவு தொகை பணம் இல்லை. அயலிலுள்ளவர்களிடம் பெற்றுத்தான் வழங்க வேண்டும் என்று, வயதான அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

பணம் உடனடியாக வழங்காவிட்டால் எதிர்வரும் மாதங்களில் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என்று தெரிவித்த அந்த நபர், வலுக்கட்டாயமாக பணத்தை பெற்றுள்ளார்.

“வந்திருப்பவர் முகக்கவசத்தை அணிந்தவாறு உடனடியாக பணத்தை வழங்க வேண்டும் என்று கடுந்தொனியில் தெரிவித்தார். அதனால் எனக்கு இது மோசடி எனச் சந்தேகம் ஏற்பட்டது. எனினும், பணத்தை வழங்காவிட்டால் எனது உயிருக்கு ஏதேனும் விபரீதம் நிகழலாம் என்ற அச்சம் ஏற்பட்டது. பணத்தை வழங்கிவிட்டு தொலைபேசியூடாக அயலவர்களுக்கு தெரிவிக்கலாம் என்று முயற்சித்த போது தொலைபேசியும் களவாடப்பட்டுள்ளது” என்று பாதிக்கப்பட்ட பெண், பொலிஸில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அத்துடன், தொலைபேசி களவாடப்பட்டமை தொடர்பாக தொலைபேசி இணைப்பு வழங்கிய நிறுவனத்துக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வாரம் நீர்வேலி பகுதியிலும் இவ்வாறான சம்பவமொன்று இடம்பெற்றதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக பிரதேச செயலகத்திலிருந்து பதிவை மேற்கொள்ள வருவதாகத் தெரிவித்து, பல பண மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

எனவே, இவ்விடயம் தொடர்பில் பொதுமக்கள் மிக அவதானமாக இருக்குமாறு அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## முன்பள்ளியின் ஆசிரியை...

முருதலாவ பிரதேசத்தை சேர்ந்த அஞ்சலி சாபா செனவிரத்ன என்ற முன்பள்ளி ஆசிரியை ஒருவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இலுகென்ன பிரதேசத்திலுள்ள முன்பள்ளிக்கு தனது வீட்டிலிருந்து சென்று கொண்டிருந்த இந்த ஆசிரியையின் கழுத்தை, கினிஹேன மயானத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளார். வெட்டுக்காயத்துடன் 100 மீற்றர் தூரத்திலுள்ள தனது அத்தையின் வீட்டுக்கு சென்று தன்னைக் காப்பாற்றுமாறு ஆசிரியை கூறியுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

ஆசிரியையின் வீட்டில் இருந்து 700 மீற்றர் தொலைவிலேயே வெட்டிக் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

முன்பள்ளி ஆசிரியை வீட்டிலிருந்து புறப்படும்போது யாருடனோ தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்ததாக தகவல் வெளியாகியுள்ளதுடன், அவரது கையடக்கத் தொலைபேசியிலிருந்து தரவுகளை பெற்று சந்தேக நபரை அடையாளம் காண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவரின் கழுத்துப் பகுதியில் பலத்த காயங்களுடன் இலுக்தென்ன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இது காதல் தொடர்பின் அடிப்படையில் நடந்த படுகொலையாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பேராதனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 7,000 அரச, தனியார் பஸ்கள்...

இந்த போக்குவரத்து திட்டம் கடந்த 07 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிராண்டா குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் எதிர்வரும் 18ஆம் திகதி வரை 7,000 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த 07ஆம் திகதி முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரை கொழும்பு மத்திய பஸ் நிலையத்திலிருந்து அனைத்து நகரங்களுக்கும் பஸ்கள் புறப்படும். ஏப்ரல் 15ஆம் திகதி முதல் ஏப்ரல் 18ஆம் திகதி வரை அனைத்து முக்கிய நகரங்களிலிருந்தும் கொழும்புக்கு விசேட பஸ்கள் இயக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டுக்காகக் கொழும்பிலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வோரின் வசதிக்காக 3,000 தனியார் பஸ்களும், 4,000 இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களும் விசேட போக்குவரத்துத் திட்டத்தின் ஒரு பகுதியாகச் சேவையில் ஈடுபடுத்தப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், மேலும் 300 பஸ்கள் அவசர தேவைகளுக்காகத் தயார் நிலையிலிருக்கும் என்றும் மத்திய பஸ் நிலையத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்படுமெனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## நடைபாதை வியாபாரிகள்...

இதன்போது நடைபாதை வியாபாரிகளுடன் சுமூகமாகக் கலந்துரையாடிய சாகல ரத்நாயக்க, அவர்களது பிரச்சினைகளை கேட்டறிந்துகொண்டதோடு, பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு நடைபாதை வியாபாரிகளின் பிரச்சினைக்கு தீர்வுகளை வழங்குவதற்கும் இணக்கம் தெரிவித்தார். நடைபாதை வியாபாரிகளின் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்தாலோசிப்பதாகவும், இந்தப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை வழங்குவதற்கான குழுவொன்றை நியமிப்பதாகவும் சாகல ரத்நாயக்க உறுதியளித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் மாஅதிபருடன் கலந்தாலோசித்த சாகல ரத்நாயக்க, நடைபாதை வியாபாரிகள் எதிர்கொள்ளும் சில பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வை பெற்றுக் கொடுத்தார்.

இதன்போது, நடைபாதை வியாபாரிகளின் கோரிக்கைக்கமைய அவர்களுக்கான அடையாள அட்டை விநியோகிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

பொலிஸ் மாஅதிபர் சீ.டி.விக்கிரமரத்ன நடைபாதை வியாபாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

## ஊடகவியலாளர்கள்... (03ஆம் பக்கத் தொடர்)

தொடர்புடைய அரச சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசாங்கத்தின் சமூக மட்ட அமைப்புகளுடன் நேரடியாக தொடர்புபட்டு பணியாற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

ஊடகவியலாளர்களும் சிவில் சமூக அமைப்பினரும் அரச அதிகாரிகளும் இணைந்து பொது மக்கள் எதிர்நோக்கும் உட்கட்டுமான தேவைகள் மற்றும் மனித உரிமை சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொதுத் தளம் ஒன்றை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கம் என, எழுத்தாணி கலைப் பேரவையின் தலைவர் வடமலை ராஜ்குமார் தெரிவித்தார்.

## தொழில்சார் பிரச்சினைகளுக்கு...

காத்திரமான நடவடிக்கை அவசியமெனவும் இ.தொ.கா. எடுத்துரைத்துள்ளது.

இ.தொ.கா.வின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும் மத்துரட்ட பெருந்தோட்ட நிர்வாகத்தினருக்கும் இடையிலான நேரடிக் கலந்துரையாடலொன்று இராகலை நகரிலுள்ள கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

மத்துரட்ட பெருந்தோட்ட நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி, முகாமையாளர்கள் உள்ளிட்டோர் நிர்வாகத்தின் சார்பில் பங்கேற்றனர். இராகலை, ஹைபொரஸ்ட், கோணபிட்டிய, மாகுடுகல உள்ளிட்ட தோட்ட மக்களும் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஷ்வரன், பிரதித் தவிசாளர் பி.இராஜதுரை, உப தலைவர் பிலிப், காரியாலய உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின்போது தொழிலாளர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். நிர்வாகம் காத்திரமான நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் குற்றம்சாட்டினார். தொழிலாளர்களின் கோரிக்கைகள் நியாயமானவை, அவை உடன் தீர்க்கப்பட வேண்டும் என, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இதன்போது வலியுறுத்தினர்.

## டுபாயிலிருந்து இலங்கை வந்த...

ஆவணங்களை அவர் வழங்கியுள்ளார். இதன்போதே, கடவுச்சீட்டு போலியானது என்பது தெரியவந்ததால் அவர்கள் இருவரையும் நாடு கடத்த தீர்மானிக்கப்பட்டது.

## நீண்டகாலம் வெளிநாடு...

அதிகாரிகள் இந்தத் தீர்மானத்துக்கு உட்பட்டவர்களென, அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் நீண்ட காலம் வெளிநாடுகளுக்குச் சென்றால் அது நாட்டின் விவசாயத் துறையை வீழ்ச்சியடையச் செய்யுமெனவும், அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்தார்.

## 26 எரிபொருள் நிலையங்களுக்கு...

QR ஒதுக்கீட்டை கடைப்பிடிக்காத 40 எரிபொருள் நிலையங்களை இடைநிறுத்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலிய சேமிப்பு முனைய நிறுவனத்தின் அதிகாரிகளுடன் அமைச்சர் கஞ்சன விஜேசேகர நடத்திய கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான அறிவிப்பு நேற்று முன்தினம் வெளியாகியிருந்தது.

## இலங்கைக்கான கடன் நிவாரண...

புதிய உயர்மட்ட பொருளாதார அதிகாரி லி கியாங்கிடம் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா கோரிக்கை விடுத்துள்ளார்.

மெரிடியன் ஹவுஸ் மற்றும் பொலிட்டிகோ நடத்திய ஒரு நிகழ்வில் உரையாற்றிய கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, கடன்களை கையாள்வதற்கு சீனா பல நிறுவனங்களைக் கொண்டுள்ளமையால், தாமதங்கள் ஏற்படுகின்றன என்று தெரிவித்துள்ளார்.

எனினும், சீனா தமது பங்கேற்பை விரைவுபடுத்த வேண்டுமென்று கோரியுள்ளதாக, கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

## பொதுச்சேவை ஆணைக்குழு...

உறுப்பினர்களாக சித்தி மெரினா மொஹமட், நரசிங்க ஹேரத் சித்திரானந்தா, பேராசிரியர் நாகநாதன் செல்வக்குமரன், மாணிக்க படத்துருகே ரோஹன புஷ்பகுமார, கலாநிதி அங்கம்பொடி தமிதா நந்தனி டி சொய்சா, ரஞ்சினி நடராஜாபிள்ளை மற்றும் பல்லேகம சந்திரரத்ன பல்லேகம ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## பஞ்சாயுதங்களை திருடிய...

குழந்தைகளை ஆறுதல்படுத்துவதாகக் கூறி, சில காலமாக பஞ்சாயுதங்களைத் திருடி வந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தப் பெண் எட்டுச் சிறுவர்களின் கழுத்திலிருந்த தங்க பஞ்சாயுதங்களை யாருக்கும் தெரியாமல் பலமுறை திருடிச் சென்றுள்ளதாகவும் அந்த விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

வேறு பஞ்சாயுதங்களும் இதேபோல் திருடப்பட்டுள்ளதா? எனும் நோக்கில் பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

## கிழக்கில் களைகட்டும்...

வருகின்றது. பெரும்பாலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான்குளம், செங்கலடி, களுதாவளை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பெருமளவில் வெள்ளரிப்பயிர்ச் செய்கை பண்ணப்பட்டு வருவதுடன், இவ்வெள்ளரிப்பழங்கள் ஏனைய ஊர்களுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றது. பனை ஓலையில் மிகப் பாதுகாப்பாகக் கட்டி விற்பனை செய்து வருகின்றனர்.

## இலங்கையர் நாட்டுக்கு...

மில்லியன் டொலர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2022 மார்ச் மாதத்தில் 318.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வெளிநாட்டுப் பணம், 2023 மார்ச்சில் 568.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இது மார்ச் 2022 இல் பதிவான வரவுகளுடன் ஒப்பிடுகையில் 78.5% (249.9 மில்லியன் அமெரிக்க டொலர்) அதிகரிப்பாகும்.

## யாழ்ப்பாணத்தில் பாணின்...

தலைவர் க.குணரத்தினம் தெரிவித்துள்ளார்.


நேற்று முதல் விலைக்குறைப்பு அமுலாகுவதாக, அவர் தெரிவித்துள்ளார். சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டாலும், பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படாதெனை ஊடகங்களில் வெளியான செய்திகளை அடுத்து, கூட்டுறவு பேக்கரி உற்பத்தியாளர் சங்கம் பாணின் விலையைக் குறைக்கத் தீர்மானித்துள்ளது. எதிர்காலத்தில் கோதுமை மா, நல்லெண்ணெய் மற்றும் முட்டையின் விலை குறையும் பட்சத்தில், பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை குறைப்பது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என, அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் முன்னதாக தெரிவித்திருந்தது.

இந்நிலையிலேயே, கூட்டுறவு பேக்கரி உற்பத்தியாளர் சங்கம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

## கடற்றொழில்சார் குடும்பங்களுக்கு...

கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் திணைக்களத்தின் அதிகாரிகளூடாக சம்மந்தப்பட்ட பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், காசோலைகளை சம்மந்தப்பட்ட மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளையும் கடற்றொழில் அமைச்சு மேற்கொண்டுள்ளது. ஏற்கெனவே மூன்று கட்டங்களாக கிடைத்திருந்த நட்டஈட்டுத் தொகை பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், தற்போது கிடைத்துள்ள நான்காவது கட்ட நட்டஈட்டை, கடலுணவு வியாபாரிகள், கருவாட்டு உற்பத்தியாளர்கள் போன்ற கடற்றொழில் சார்ந்த தொழிலாளர்களுக்கும் பகிர்ந்தளிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# கிழக்கின் குரல்



திருமலையில்

## இரு மீனவர் குழுக்களுக்கிடையில் மோதல்; 21 பேர் வைத்தியசாலையில்

ரொட்டவெவ குறூப் நிருபர்



திருகோணமலை திருக்கடலூர் மீனவக்கிராமத்தை சேர்ந்த மீனவர்களுக்கும் விஜிதபுர கிராமங்களில் உள்ள சிங்கள மீனவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டிருப்பதோடு படுகாயமடைந்த பலர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மோதல் காரணமாக ஏற்பட்ட பதற்றத்தை தணிக்க பொலிஸாரும் இராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டதன் காரணமாக நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. விஜிதபுர கிராமத்துக்குள் சென்று கலகம் விளைவித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் திருக்கடலூரைச் சேர்ந்த ஐந்து இளைஞர்களை உப்பு வெளி பொலிஸார் நேற்று (07) கைது செய்துள்ளனர்.

பெரும்பான்மையினர் மீன்பிடிக்கும் கடற்பரப்புக்குள் சிறுபான்மையினர் மீன் பிடிப்பதை பார்த்த பெருபான்மையினர் ஒன்று சேர்ந்து கடற்பரப்புக்குள் மீன்பிடிப்பவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இது பிரதேச முரண்பாட்டை உண்டாக்கவே திருக்கடலூரைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து தமது சகாக்களை தாக்கியவர் வீடுகளை தேடிச் சென்று தாக்குதல் நடத்தியுள்ளனர். மீண்டும் இது விஷ்வரூபம் எடுக்கவே இருதரப்பினரின் ஆதரவாளர்களும் ஒன்று கூடி நேரடி தாக்குதலை மேற் கொண்ட நிலையில் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கல்லு பொல்லுகள் காரணமாக இருதரப்பினருக்கும் காயம் ஏற்பட்ட நிலையில் பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த 13 நபர்களும் தமிழ் மீனவர்கள் 8 பேரும் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதல் பரவிவிடக்கூடாது என்பதை கவனத்தில் கொண்டு பொலிஸாரும், இராணுவமும் வரவழைக்கப்பட்டு நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

கடந்த வியாழக்கிழமை காலையிலும் மாலையிலும் இச்சம்பவம் நடந்ததாகவும் எதிர்வரும் சித்திரை புத்தாண்டில் விளையாட்டுப் போட்டி நடத்துவதற்கு நிதி திரட்டும் நோக்கில்

### நேற்று இருவர் கைது பதற்றம் தணிந்தது

திருக்கடலூர் தமிழ் மீனவர்கள் பெரும்பான்மையினர் மீன்பிடிக்கும் கடல் பிரதேசத்தில் மீன்பிடிக்க உரியவர்களை கேட்டு மீன்பிடித்துக் கொண்டிருந்த நிலையில் இந்த உண்மையை தெரிந்து கொள்ளாத விஜிதபுர மீனவர்கள் தங்கள் பரப்புக்குள் மீன்பிடிக்கிறார்கள் என்ற கோபத்துடன் மீன்பிடித்த தமிழ் இளைஞர்களை தாக்கியதன் எதிரொலியாகவே இந்த மோதல் இடம் பெற்றுள்ளது.

இந்த மேதல் காரணமாக அயல் கிராமங்களில் வாழும் தமிழ், சிங்கள இளைஞர்கள் மத்தியில் பதற்றநிலை உருவாகியதாகவும் நிலமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிசார் வரவழைக்கப்பட்டதோடு இராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டதாகவும் மோதல் இடம் பெறுதற்கு தமிழ் இளைஞர்கள் தான் காரணமென்ற குற்றச்சாட்டின் பேரில் திருக்கடலூரை சேர்ந்த வடிவேல் பிரதீபன், ஜேசுதாசன் நடேசன், சுப்பிரமணியம் ராஜா, பாஸ்கரன் செந்தூரன் ஆகிய நான்கு இளைஞர்களை திருகோணமலை தலைமைக்காரியாலய பொலிஸார் நேற்றைய தினம் காலை கைது செய்துள்ளனர் என தெரிய வருகிறது.

## தனியார் கல்வி நிலையங்களை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அறிவித்தல்;

### காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி ரிப்கா ஷபீன்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி நகர சபை பிரிவில் நோன்பை முன்னிட்டு தனியார் கல்வி நிலையங்களை 24.04.2023 வரை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி ரிப்கா ஷபீன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,..

காத்தான்குடி நகரிலுள்ள தனியார் பிரத்தியேக கல்வி நிறுவனங்களில் நோன்பு நாட்களில் காலை 6.00 மணி தொடக்கம் மாலை 5.30 வரை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகளை நடாத்துவதாகவும் இதன் காரணமாக பிள்ளைகள் நோன்புடன் மயக்கமுற்ற நிலைமையில் சோர்வடைந்து வீடுகளுக்கு வந்து சேருவதாகவும் இரவு வணக்கங்களில் ஈடுபடுவது சிரமமாக இருப்பதாகவும் பெற்றோர்களாலும் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தினாலும் இச் சபைக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடும் வெப்பமான காலநிலை நிலவுவதால் காத்தான்குடி நகர எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் தரம் 1 முதல் தரம் 10 வரையான மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் 06.04.2023 தொடக்கம் 24.04.2023 வரை தற்காலிகமாக இடைநிறுத்தி மாணவர்கள் மார்க்க கடமைகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதி

பாலமுனை விசேட நிருபர்

ரமழான் மாதத்தினை முன்னிட்டு, அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வருமானம் குறைந்த மற்றும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதி வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றினை செக்டோ ஸ்ரீலங்கா அமைப்பு முன்னெடுத்து வருகின்றது.

குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை (6) செக்டோ ஸ்ரீலங்கா அமைப்பின் காரியாலயத்தில் இடம் பெற்றது.செக்டோ ஸ்ரீலங்கா அமைப்பின் தலைவர் சட்டத்தரணி ஏ.எல்.நியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் ஷாபீர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தார். கோணாவத்தை பிரதேசத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 55 குடும்பங்களுக்கு 3,000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.





இயேசுபிரான் மனுக்குலத்தின் பாவங்களுக்காக தன்னுயிரை ஈகம் செய்யும் புனித வெள்ளியை முன்னிட்ட திருச்சலுவைப் பாதை நேற்று (07) மட்டக்களப்பு நகரில் நடைபெற்றது. புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் ஆரம்பமான திருச்சிலுவைப் பாதை மத்திய வீதி, வைத்தியசாலை வீதி, கோவிந்தன் வீதி, அப்புக்காத்து வீதி, சென் மேரிஸ் வீதி மற்றும் புனித அந்தோனியார் வீதி வழியாக மீண்டும் பேராலயத்தைச் சென்றடைந்தது. (படம்; மட்டக்களப்பு விஷேட நிருபர்)

## காத்தான்குடிக்கு மாடுகளை கடத்தி வந்தவர் கைது

### ஆறு எருமை மாடுகள் மீட்பு

மட்டக்களப்பு குறூப் நிருபர்

பொலன்னறுவை கிரித்தலை பிரதேசத்தில் இருந்து காத்தான்னுடிக்கு சட்ட விரோதமாக லொறி ஒன்றில் எருமை மாடுகளை கடத்திச் சென்ற ஒருவரை காத்தான்குடி கடற்கரை வீதியில் வைத்து நேற்று முன்தினம் (6) அதிகாலை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்ததுடன் 6 எருமை மாடுகள், லொறி ஒன்றையும் மீட்டு ஒப்படைத்துள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் டிலங்கவெலவின் ஆலோசனையில் சப்இன்ஸ்பெக்டர் ஆர்.எம்.ஆர். சதுரங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் சம்பவதினமான நேற்று முன்தினம் அதிகாலை காத்தான்குடி கடற்கரை வீதியில் வைத்து குறித்த லொறியை மடக்கிப்பிடித்து சோதனையிட்டனர்.

இதன் போது லொறியில் சட்டவிரோதமாக 6 எருமை மாடுகளை கடத்திச் செல்வதை கண்டுபிடித்து லொறியின் சாரதியை கைது செய்ததுடன் 6 மாடுகளையும் லொறியையும் மீட்டு ஒப்படைத்துள்ளனர்.

## பாலமுனையில் தேசிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள்

பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்



சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தேசிய டெங்கு ஒழிப்புவாரத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமும் விழிப்புணர்வு நிகழ்வு வியாழக்கிழமை (06) பாலமுனையில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.எம்.இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாலமுனை பிரதேசத்துக்கான பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.பி.மிஹியார், சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.ஐ.ஹைதர் உட்பட அட்டாளைச்சேனை பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்கள்,பாலமுனை றைஸ்டார் விளையாட்டு கழக மற்றும் அட்டாளைச்சேனை Iconic youth அமைப்பின் உறுப்பினர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள்,பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் பாலமுனை பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று பரிசோதனைக்குட்படுத்தியதுடன் டெங்கு பரவக்கூடிய வகையில் காணப்பட்ட வீட்டுச் சூழல்கள், வெற்றுக் காணிகளில் காணப்பட்ட பொருட்கள் உடனடியாக அகற்றப்பட்டதுடன். உரிமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டதுடன் அதனை மீறி செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி இதன் போது தெரிவித்தார்.

## திருகோணமலை பொது வைத்தியசாலையில் சக்கர நாற்காலிகளுக்கு தட்டுப்பாடு

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை பொது வைத்தியசாலையில் நோயாளர்கள் அனுமதிக்கும் இடத்தில் நோயாளர்களை ஏற்றிச் செல்லும் வீல்ச் செயார் (சக்கர நாற்காலிகளுக்கு) தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் அதிக வைத்தியசாலைகளில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக அதிகளவிலான நோயாளர்கள் இவ் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

இந்நிலையில் குறித்த நோயாளர்கள் அனுமதிக்கும் இடத்தில் பத்துக்கும் மேற்பட்ட வீல்ச் செயார்கள் தேவைப்படுகின்ற போதிலும் அனைத்து வீல்ச் செயார்களும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதுடன், உடைந்தும் காணப்படுகின்றது.



இவ்விடயம் தொடர்பாக குறித்து பிரிவில் கடமையாற்றும் ஊழியர்கள் தங்களது மேற்பார்வையாளர்களிடம் முறையிட்ட போதிலும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் புதிய வீல்ச் செயார்களை வழங்குவதற்கு நிதி வழங்கப்படவில்லை என குறிப்பிட்டனர்.

இருந்த போதிலும் உடைந்த நிலையில் இரும்புக்காக விற்பனை செய்யப்படவிருந்த குறித்த வீல்ச் செயார்களை களஞ்சியசாலையில் இருந்து பெற்றுக்கொண்டு தங்களுடைய முயற்சியினால் நோயாளர்களின் நலன் கருதி குறித்த பிரிவிற்கு பொறுப்பாக இருக்கின்ற சிற்றூழியர்கள் வீல்ச் செயார்களை திருத்தி, நிறம் பூசி பயன்படுத்தி வருகின்றனர்.



அம்பாறை சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தலத்தில் இயேசுவின் பாடுகளை நினைவுகூரும் திருச்சிலுவைப் பாதை பெரிய வெள்ளிக்கிழமையான நேற்று சிறப்பாக இடம்பெற்றது. (படம்: சவளக்கடை குறூப் நிருபர்)

## ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்த மூவருக்கு விளக்கமறியல்

கந்தளாய் தினகரன் நிருபர்

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப் பொருட்களை வைத்திருந்த மூன்று சந்தேக நபர்களை இம்மாதம் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றபதில் நீதிவான் உத்தரவிட்டார்.

கிண்ணியா, குட்டிக்கரைச்சி, குறிஞ்சாக்கேணி பகுதியைச் சேர்ந்த 42,24 மற்றும் 31 வயதுடைய மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் மூவரிடமிருந்தும் 10 கிராம் ஐஸ் போதைப் பொருட்கள் திருகோணமலை போதைப்பொருள் தடுப்பு பணியக அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர்களை கிண்ணியா பொலிஸார் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.



அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கான உத்தியோகபூர்வ மேலங்கி, அலுவலக கேட்போர் கூடத்தில், வைபவ ரீதியாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. நிர்வாகத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளரும், கல்விசாரா உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கத் தலைவருமான ஏ.ஜி.பஸ்மில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். (படம்: அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

## கந்தளாய்– அக்போபுர பகுதியில் ரயில் தடம் புரள்வு; 17 பேர் காயப்பட்டு வைத்தியசாலையில்

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டம் கந்தளாய்அக்போபுர பகுதியில் ரயில் தடம் புரண்டதில் 17 பேர் படுகாயமடைந்துள்ளனர்.இச்சம்பவம் நேற்று (07) 12.55 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

கல்ஓயாவிலிருந்து திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்த ரயில் கித்துல்உதுவ பகுதியில் ரயில் பெட்டியொன்று தடம் புரண்டதாகவும் தெரிய வருகின்றது.

இவ்விபத்தில் காயமடைந்த 17 பேரும் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் மூன்று ஆண்களும், ஒரு சிறுவனும் அடங்குவதாக வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

மஹாவலி கங்கையின் நீர் குறைவால்

# 30,000 குடும்பங்களுக்கு கடும் குடிநீர் தட்டுப்பாடு

**தம்புள்ள தினகரன் நிருபர்**

மஹாவலி கங்கையின் நீர் மிகவும் வற்றி, நிலம் வரண்டு காணப்படுவதால் குண்டசாலை நீர் விநியோகத் திட்டத்தின் மூலம் நீரைப் பெற்றுக் கொள்ளும் சுமார் 30,000 குடும்பங்கள் கடும் குடிநீர் தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுத்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மஹாவலி ஆற்றின் ஊடாக விக்டோரியா நீர்த்தேக்கத்துக்குச்செல்லும் நீர் பல்லேகல பிரதேசத்தில் வழிமறித்து சுத்திகரிப்பு செய்யப்பட்டு குண்டசாலை, பலகொல்ல, திகன, வராபிட்டிய உள்ளிட்ட சுற்றுப்புற கிராமங்களில் உள்ள சுமார் 30,000 குடும்பங்களுக்கு குடிநீராக வழங்கப்படுகிறது.

எவ்வாறாயினும், மஹாவலி கங்கையின் நீர் வெகுவாகக் குறைந்துள்ளதாலும், சில பகுதிகளில் தொடர்ச்சியாக ஐந்தாறு நாட்களுக்கு நீர் நிறுத்தப்படும் அளவிற்கு குடிநீர்



விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல்லேகல முதலீட்டு வலயம், மத்திய மாகாண சபை வளாகம், தும்பற திறந்த சிறைச்சாலை, ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் அங்குள்ள முக்கிய இடங்கள் உட்பட பல அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு குண்டசாலை நீர்த்திட்டத்தின் மூலம் நீர் விநியோகிக்கப்படுகிறது. இது தொடர்பில் கருத்து தெரிவித்த பிரதேச மக்கள், பலகொல்லயில் மட்டும் 1,500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதாகவும், தொடர்ந்து ஐந்து நாட்களாக தண்ணீர் வராததால் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

நோன்பு காலத்தில் தண்ணீர் பற்றாக்குறை மிகவும் சிரமமாக இருப்பதாகவும், தண்ணீர் கிடைக்க வேறு மாற்று வழிகள் இல்லை என்றும் கூறுகின்றனர். எனவே, தங்களுக்கு விரைவில் தடையில்லா குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் குண்டசாலை நீர்த் திட்ட முகாமையாளர் மற்றும் நீர்த் திட்ட பொறியியலாளர் எச்.பி.கே.எஸ். பதிரணவிடம் கேட்கப்பட்ட போது குண்டசாலை நீர்த்திட்டத்தின் மூலம் 30,000 குடும்பங்களைச் சேர்ந்த 150,000 பேருக்கு குடிநீர் வழங்கப்படுகின்றது.

மஹாவலி ஆறு வரண்டு கிடப்பதால், இந்நாட்களில் தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கு பல மாற்று திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.




# ஒரே பாடசாலையில் பத்து வருடத்திற்கு மேல் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

**ஹற்றன் விசேட நிருபர்**

பத்து வருடங்களுக்கு மேல் நகர் புற பாடசாலைகளில் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட உள்ளதாக மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் அமரசிறி பியதாச தெரிவித்தார்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் ஹற்றன் கல்வி வலயம் இணைந்து அபியச எனும் தொனிப் பொருளில் நடமாடும் சேவை ஒன்று நேற்று முன்தினம் ஹற்றன் ஸ்ரீபாத சிங்கள மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் நடந்த ஊடக சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தில் நகர்புற பாடசாலைகளில் பலர் 10 வருடத்திற்கும் மேலாக கடையாற்றுகின்றனர். இன்னும் சிலர் மேலதிகமாக



உள்ளனர். ஆகவே இடமாற்ற சபைகள் ஊடாக அவர்களை ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்ற பாடசாலைகளுக்கு மாற்றப்படவுள்ளதாகவும், அதிகஷ்ட பாடசாலைகளில் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கு நகர் பாடசாலைகளில் சேவையாற்ற சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் கடந்த வருடம் வீழ்ச்சி கண்ட ஹற்றன் கல்வி வலயத்தினையும் மத்திய மாகாணத்தில் பின்னடைந்த ஏனைய வலயங்களையும் கல்வி முன்னேற்றம் காண்பதற்கு விசேட திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# மஸ்கெலியா சிறுவர் பூங்கா பகுதியில் மூன்று கூடுகள்



**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உரித்தான சிறுவர் பூங்கா பகுதியில் மூன்று மரங்களில் மூன்று குளவி கூடுகள் கட்டியுள்ளன. அந்த கூடுகளில் உள்ள குளவிகளால் அங்கு விளையாடும் சிறார்களுக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்பு உள்ளது. இது தொடர்பில் மஸ்கெலியா பிரதேச சபை கவனம் செலுத்தி, அந்த குளவிக்கூடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மரக்கிளைகளிலேயே குளவிகள் கூடுகளைக் கட்டியுள்ளன. கிளைகள் முறிந்து குளவிக் கூடுகள் கலைந்தால் பாரிய ஆபத்துகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் பிரதேசவாசிகள் தெரிவித்துளனர்.

இராகலை - ஹைய்பொரஸ்ட்

# இ.போ.ச பஸ் சேவை நிறுத்தம் மக்கள் அசௌகரியம்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

நுவரெலியா போக்குவரத்து சபையின் கீழ் இயங்கி வந்த இராகலையில் இருந்து ஹைய்பொரஸ்ட் வழியாக கோணபிட்டிய குட்வுட் வரையிலான பஸ் சேவை அண்மைக் காலமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த பஸ்ஸில் வலப்பனை மற்றும் ஹங்குரன்கெத்த வலயத்திற்குட்பட்ட பல பாடசாலை மாணவர்கள் செல்வதால் சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் பல்வேறு சௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இச் சேவை காலை 7.00 மணிக்கு இராகலையிலிருந்து புறப்பட்டு ஹை பொரஸ்ட் வழியாக 8.00 மணிக்கு கோணபிட்டிய குட்வுட் வரை சேவையில் ஈடுபட்டு வந்தது.

எனினும் இந்த பஸ் சேவை நிறுத்தப்பட்டமையால் மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருகை தர முடியாததன் காரணமாக கற்பித்தல் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.



ஆசிரியர்கள் சிலர் நாள் ஒன்றுக்கு 1000/ தொடக்கம் 1500/ வரை செலவு செய்வதோடு சிலர் பல கிலோ மீட்டர் தூரம் நடந்தும் செல்கின்றனர்.

4 மாதங்களாக இந்த பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. போக்குவரத்து சபையின் அதிகாரிகளும் பஸ் பழுதடைந்துள்ளது, ஒட்டுனர் இல்லை என பல சாக்குபோக்குகளை கூறுகின்றனர்.

இச் சேவையை பயன்படுத்துவது பெரும்பாலும் தமிழ் மொழி பாடசாலை என்பதால் போக்குவரத்து சபை அதிகாரிகள் பெரிதாக அலட்டிக் கொள்வதுமில்லை.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உடன் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

## "மலையக மக்கள் சக்தி" புதிய தொழிற்சங்கம் ஆரம்பம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுத்தல் இதுவரையிலும் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் உள்ளிட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு "மலையக மக்கள் சக்தி" எனும் பெயரில் புதிய தொழிற்சங்கமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

மலைய மக்கள் இலங்கைக்கு வருகைதந்து 200 வருடங்கள் கடந்து விட்டது. எனினும், அம்மக்களுக்கு காணி அதிகாரம் இல்லை. ஆகையால் அம்மக்களுக்கு காணி அதிகாரத்தை பெற்றுக்கொடுத்தல், கல்வியை மேம்படுத்தல் முக்கியமானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய தொழிற்சங்கத்தின் தலைவராக ராமன் செந்தூரன், அதன் பொதுச் செயலாளர் திருமதி தியாகராஜா ஜெயலலிதா, துணைத் தலைவர் எஸ். சண்முகப்பிரியா, பிரதிச் செயலாளராக சின்னகருப்பன் விமலநாதன், பொருளாளராக தியாகராஜா சுதர்ஷனி ஆகியோர் கடமையாற்றுவர்.

# சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

## வாகனங்களும் மீட்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**



சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி நவபுரம் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் சட்டவிரோதமாக சுண்ணாம்புக் கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டிருப்பதுடன்அகழ்விற்கு பயன்படுத்திய வாகனங்கள் இரண்டினையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

நவபுரம் பகுதியில் சுண்ணாம்புக் கல் அகழ்வு இடம்பெறுவதாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான குழுவினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சுண்ணாம்புக் கல் அகழ்வதற்கு பயன்படுத்திய ஜே.சி.பி வாகனம் மற்றும் சுண்ணாம்பு கல்லை ஏற்றிய நிலையில் காணப்பட்ட டிப்பர் வாகனம் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

# சாவகச்சேரிக்கு சட்டவிரோதமாக கடத்திய 12 மாடுகள், 11 ஆடுகள் பொலிஸாரால் மீட்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**



கிளிநொச்சிப் மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு லொறியில் கால்நடைகளை கடத்திய இருவர் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து கொடிகாமம் கச்சாய் வீதி ஊடாக சாவகச்சேரிக்குள் நுழைய முற்பட்ட வேளையில் சாவகச்சேரிப் பொலிஸாரின் சோதனையின் போது கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது. இதன்போது லொறியில் மறைத்து கடத்திச் செல்லப்பட்ட 12 மாடுகள் மற்றும் 11 ஆடுகளை பொலிஸார் பாதுகாப்பாக மீட்டதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர். கைதான நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவருக்கு

## 14 மாத சிறைத்தண்டனை

**யாழ். விசேட நிருபர்**

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 12 பேர்களில் ஒருவருக்கு 14 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அனலை தீவு கடற்பகுதியில் கடந்த 23ஆம் திகதி இரண்டு படகுகளில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்த 12 தமிழக கடற்தொழிலாளர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மறுநாள், கடற்தொழில் நீரியல் வளத்துறையினர் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது 12 கடற்தொழிலாளர்களில் ஒருவர் கடந்த ஒரு வருட காலத்திற்குள் இரண்டு தடவைகள் எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதாகி நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டவர் என மன்றில் அடையாளம் காணப்பட்டதை அடுத்து அவருக்கு 14 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

# யாழ்ப்பாணத்தில் பாணின் விலை 160 ரூபாய்

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை முதல் 450 கிராம் எடையுள்ள பாணின் விலை 10 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது என யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கத் தலைவர் க.குணரத்தினம் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் கோதுமை மா, எண்ணெய் மற்றும் முட்டையின் விலை குறையும் பட்சத்தில், வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலையை குறைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்று அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ள நிலையில், யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் பாணின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டு 160 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

யாழ். சிறைச்சாலையில்

# "சிறைச்சாலை நூலகம்" அங்குரார்ப்பணம்

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

"ஒரு நூலகம் திறக்கப்படும் பொழுது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன" எனும் கூற்றுக்கு அமைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதிகளின் பாவனைக்கென நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நூலகம் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுகிறது.

# கலைபீட அருங்காட்சியகத்திலுள்ள புராதனப் பொருட்கள் மாயம்

**அக்குறணை குறூப் நிருபர்**

பேராதனைப் பல்கலைக்கழக கலைபீட அருங்காட்சியகத்திலுள்ள சில புராதனப் பொருட்கள் காணாமல் போயுள்ளதாகவும், அது தொடர்பாக பொலிஸ் விசாரணைகள் இடம் பெறுவதாகவும் பல்கலைக்கழக பிரதி உபவேந்தர் ட்ரன்ஸ் மவுஜித் தெரிவித்தார்.

யானைத் தந்தம் மூலம் செய்யப்பட்ட பொருட்கள் உட்பட பல்வேறு புராதனப் பொருட்கள் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உடப்புசலாவையில் சத்துணவு பரிமாற்ற திட்டம்



உடப்புசலாவையில் இயங்கி வரும் ஏபர்நெட் லங்கா ஆடை தொழிற்சாலையில் 'நிவுற்றிபூல்' (NUTRIE POOL) சத்துணவு பரிமாற்ற திட்டத்தின் கீழ் இடம் பெற்ற நிகழ்வு நேற்று ஆடை தொழிற்சாலையின் பிரதான முகாமையாளர் என்.எச்.சுதத் நாகசேன தலைமையில் தொழிற்சாலை அரங்கில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட, பேராதெனிய பல்கலைக்கழக விவசாய பிரிவு உவசரா நிஸாநாயக்க,பீடாதிபதி விவசாய பிரிவு தலைவர் சரத் கொடிதுவக்கு,பேராதெனிய பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் அனுராத ஜயவீர, பேராதெனிய பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ரசாஞ்சலி, தேசிய போதைப் பொருள் பாவனை கட்டுப்பாட்டாளர் எஸ்.விஜயவர்தன உள்ளிட்ட விளையாட்டு பயிற்சியாளர்கள் மற்றும் மேலும் பல முக்கியஸ்தர்கள் கலந்துக் கொண்டனர்.

இதன்போது சத்துணவு வங்கியின் பயன்பாடு,போதை பாவனையில் இருந்து விடுபடுதல், உடல் சக்தியை வலுப்படுத்தல், விளையாட்டுகளில் ஈடுபடுதல் போன்ற பல்வேறு விடயங்களில் விழிப்புணர்வு இடம்பெற்றது.

அத்துடன் ஆடை தொழிற்சாலை ஊழியர்களின் கலைநிகழ்வுகளும், மரக்கன்று நடுகைகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஆ.ரமேஸ்

# கலைமகள் வித்தியாலயத்தில் அதிபர் வெற்றிடம்

**புதுக்குடியிருப்பு விசேட நிர[பர்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லை கல்வி வலயத்தின் கீழ் உள்ள முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திற்கு கடந்த மூன்று மாதங்களாக அதிர் இல்லாத நிலை தொடர்ந்து வருகின்றது.

2022 ஆம் ஆண்டு அதிபராக இருந்தவர் 31.12.2022 அன்று ஓய்வு பெற்ற நிலையில் இதுவரை பாடசாலைக்கான அதிபர் நியமிக்கப்படவில்லை. 650 மாணவர்களை கொண்டு தரம் 11 வரை இயங்கி வரும் இந்த பாடசாலையில் 45 வரையான ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றார்கள். அதிபர் இல்லாத நிலை காணப்படுவதாக பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள்.

போரால் பாதிக்கப்பட்ட நிலையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் பெறுபேறு அடிப்படையிலும் சிறந்த பெறுபேறுகளை பெற்று வரும் பாடசாலைகளில் முள்ளியவளை கலைமகள் வித்தியாலயமும் ஒன்றாக காணப்படுகின்றது.

# உலகக் கிண்ண தகுதிகாண்: டி.ஆர்.எஸ் முறை இல்லை




சிம்பாப்வேயில் எதிர்வரும் ஜூன், ஜூலை மாதங்களில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் மூன்றாவது நடுவரிடம் மேன்முறையீடு செய்யும் டி.ஆர். எஸ் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ரன் அவுட் முறையில் மூன்றாவது நடுவரின் கண்காணிப்பு இடம்பெறும் என்பதை சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் உறுதி செய்துள்ளது.

எனினும் 2019 உலகக் கிண்ணத்திற்காக 2018 மார்ச்சில் சிம்பாப்வேயில் நடைபெற்ற உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியிலும் டி.ஆர். எஸ் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவில்லை.

எனினும் மூன்றாவது நடுவரை பயன்படுத்துவது தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளது. 2018இல் நடைபெற்ற 34 போட்டிகளில் 10 போட்டிகள் மாத்திரமே தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட நிலையில் அந்தப் போட்டிகளில் மாத்திரமே மூன்றாவது நடுவர் பயன்படுத்தப்பட்டமை குறிப்பித்தக்கது.

இலங்கை உட்பட 10 அணிகள் பங்கேற்கும் இந்தத் தகுதிகாண் போட்டிகள் சிம்பாப்வேயில் வரும் ஜூன் 18 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகளே இந்தியாவில் நடைபெறும் ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சம்பியனானது தம்புள்ளை




தேசிய சுப்பர் லீக் ஒருநாள் தொடரில் ஜப்னா அணியை 5 விக்கெட்டுகளால் வீழ்த்தி தம்புள்ளை சம்பியன் கிண்ணத்தை வென்றது.

ஆர். பிரேமதாச மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை (06) நடைபெற்ற இறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஜனித் லியனகே தலைமையிலான ஜப்னா அணி 47.3 ஓவர்களில் 160 ஓட்டங்களுக்கே சுருண்டது.

ஆரம்ப வீரர் நவோத் பரணவிதான மாத்திரம் அரைச்சதம் ஒன்றை பெற்றார். இதன்போது சனொல் தினுஷ, லக்ஷான் சதகன் மற்றும் துஷான் ஹேமன்த ஆகியோர் தம்புள்ளை அணிக்காக தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய ஜப்னா அணிக்கு ஆரம்ப வீரர் பவன் ரத்னாயக்க நிதானமாக ஆடி 62 ஓட்டங்களை பெற்றதோடு சொனால் தினுஷ ஆட்டமிழக்காது 45 ஓட்டங்களை பெற்று அந்த அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

ஜப்னா அணி 39 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

இந்தத் தொடரில் சம்பியனான தம்புள்ளை அணிக்கு 2 மில்லியன் ரூபா பணப்பரிசும், இரண்டாவது இடத்தைப் பிடித்த ஜப்னா அணிக்கு ஒரு மில்லியன் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

# இலங்கை-நியூசிலாந்து இடையிலான தொடரைத் தீர்மானிக்கும் டி20 இன்று

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான தொடரை தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் இறுதி டி20 போட்டி குவின்ஸ்டவுன், ஜோன் டேவிஸ் ஓவல் மைதானத்தில் இன்று (08) நடைபெறவுள்ளது.

இலங்கை அணி டி20 போட்டியில் சுப்பர் ஓவரில் வெற்றியீட்டி நம்பிக்கை தந்தபோதும் இரண்டாவது போட்டியில் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு இரண்டிலும் சோபிக்காது மோசமான தோல்வியை சந்தித்தது.

இந்நிலையில் நியூசிலாந்து மண்ணில் மற்றுமொரு தொடர் தோல்வியை தவிர்ப்பதற்கு இலங்கை அணி இன்று தனது முழுத் திறமையையும் வெளிப்படுத்த கடுமையாகப் போராட வேண்டி உள்ளது.

எனினும் உபாதைக்குப் பின் அணிக்குத் திரும்பி இருக்கும் குசல் பெரேரா, சரித் அசலங்க மற்றும் குசல் மெண்டிஸ் ஆகிய வீரர்கள் தமது துடுப்பாட்ட திறமைக்கு திரும்பி இருப்பதோடு அணித் தலைவர் தசுன் ஷானக்க, பத்தும் நிசங்க மற்றும் தனஞ்சய டி சில்வா கைகொடுத்தால் அதிக ஓட்டங்களை பெற முடியுமாக இருக்கும்.

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியில் குறுகிய இடைவெளியில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்ததே இலங்கை ஆதிக்கம் செலுத்த முடியாமல்போனதற்கு காரணமாகும். தொடர் வெற்றிக்கு அந்தத் தவறை திருத்திக் கொள்வது கட்டாயமாகும்.




பந்துவீச்சை பொறுத்தவரை மஹீஷ் தீக்ஷனவில் அதிகம் தங்கி இருப்பது தெரிகிறது. முதல் போட்டியில் அவர் அபாரமாக செயற்பட்டபோதும் இரண்டாவது ஆட்டத்தில் எதிர்பார்த்த அளவு சோபிக்கவில்லை. இந்நிலையில் வனிந்து ஹசரங்கவும் எதிரணிக்கு சவால் விடுத்தால் இலங்கையின் வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும்.

இன்றைய போட்டி நடைபெறும் குவின்ஸ்டவுன் மைதானத்தில் இதற்கு முன் ஆடவர் டி20 சர்வதேச போட்டிகள் நடைபெற்றதில்லை. இரு மகளிர் டி20 சர்வதேச போட்டிகள் நடைபெற்றுள்ளன. இரண்டு சந்தர்ப்பங்களிலும் முதலில் துடுப்பெடுத்தாடிய அணிகளே வெற்றியீட்டின.

இங்கு இன்று மழைக்கான வாய்ப்புக் குறைவாக உள்ளதோடு போட்டிக்கு பொருத்தமாக காலநிலை நிலவுவதாக காலநிலை அவதானிப்பு நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

ஏற்கனவே, நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் முழுமையாக தோல்வியை சந்தித்த இலங்கை அணி நியூசிலாந்து சுற்றுப்பயணத்தின் கடைசி போட்டியில் வென்று டி20 தொடரை கைப்பற்றும் பொன்னான வாய்ப்பை பெற்றுள்ளது.

இலங்கை அணி நியூசிலாந்து மண்ணில் இதுவரை டி20 தொடர் ஒன்றை வென்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பாரதி இல்லம் வெற்றி

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**




மகாஜனா கல்லூரியின் இல்ல விளையாட்டு போட்டியில் பாரதி இல்லம் 599 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை தட்டிக்கொண்டது.

மட்டக்களப்பு மகாஜனா கல்லூரி பெண்கள் தேசிய பாடசாலையின் 2023 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி அதிபர் எஸ். சாந்தகுமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி. வாசுதேவன் கலந்துகொண்டார். இவ்விளையாட்டு போட்டியில் கம்பன் இல்லம் 482 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், இளங்கோ இல்லம் 295 புள்ளிகளை பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.



கல்முனை ஸன் பிறைட் விளையாட்டு கழகத்தின் 3ஆவது கிரிக்கெட் சீருடை அறிமுக நிகழ்வு அண்மையில் கல்முனையில் இடம்பெற்றபோது பிடிக்கப்பட்ட படத்தினை காணலாம். இந்நிகழ்வில் அனுசரணையாளர் மற்றும் விளையாட்டு கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். *(படம்: மாளிகைக்காடு குறூப் நிருபர்)*

# வள்ளுவர் இல்லம் வெற்றி

**புதிய காத்தான் குடி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு, மண்முனை மேற்கு விளாவட்டவான் விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் வள்ளுவர் இல்லம் முதலாம் இடம் பெற்று சம்பியன் கிண்ணத்தை வென்றது.

விளாவட்டவான் ராஜா விளையாட்டு மைதானத்தில் பாடசாலையின் அதிபர் நவரெத்தினம் நவேந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த விளையாட்டுப் போட்டியில் கம்பர் இல்லம் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

அனைத்து போட்டியிலும் சாதித்த வள்ளுவர் இல்ல மாணவன் தி. லக்சன் இந்த வருடத்திற்கான சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார்.

**பிஃபா தரவரிசை:**

# உலக சம்பியன் ஆர்ஜன்டீனா முதலிடத்திற்கு முன்னேற்றம்



உலக சம்பியனான ஆர்ஜன்டீனா பிஃபா தரவரிசையில் கடந்த ஆறு ஆண்டுகளில் முதல் முறையாக முதல் இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

கடந்த டிசம்பரில் கட்டாரில் நடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் பிரான்ஸை வீழ்த்தி லியோனல் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜன்டீன அணி கிண்ணத்தை சுவீகரித்தது. தொடர்ந்து மார்ச் மாதம் நடந்த பனாமா மற்றும் கரகோ அணிகளுக்கு இடையிலான சர்வதேச நட்புறவுப் போட்டிகளிலும் வெற்றியீட்டியது.

இதன்போது மெஸ்ஸி கால்பந்து போட்டிகளில் 800 கோல்கள் மற்றும் 100 சர்வதேச கோல்கள் என்ற மைல்கற்களை எட்டினார்.

கடைசியாக 2017 ஆம் ஆண்டு பிஃபா தரவரிசையில் முதலிடத்தை பிடித்த ஆர்ஜன்டீனா அடுத்த ஆண்டாகும்போது 12 ஆவது இடம் வரை பின்தள்ளப்பட்டது. 2018 உலகக் கிண்ணத்தில் அந்த அணி சோபிக்கத் தவறியது பின்னடைவுக்குக் காரணமானது.

இந்நிலையில் நட்புறவுப் போட்டியில் அதிர்ச்சித் தோல்வி அடைந்த பிரேசிலை பின்தள்ளியே ஆர்ஜன்டீனா முதலிடத்தைப் பிடித்துள்ளது. பிரேசில் தற்போது மூன்றாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

2024 யூரோ தகுதிகாண் போட்டியில் நெதர்லாந்து மற்றும் அயர்லாந்து அணிகளை வென்ற பிரான்ஸ் இரண்டாவது இடத்தில் உள்ளது.

# இலங்கை வரும் அயர்லாந்து அணி பங்களாதேஷ் அணியிடம் தோல்வி

அயர்லாந்துடனான ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

மிர்பூரில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்று (07) பங்களாதேஷ் அணிக்கு 138 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டதோடு இரண்டாவது இன்னிங்ஸில் அந்த அணி 3 விக்கெட்டுகளை இழந்து இலக்கை எட்டியது. முஷ்பீகுர் ரஹீம் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களை பெற்றார்.

இந்த டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 77.2 ஓவர்களில் 214 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. இதன்போது தைஜுல் இஸ்லாம் ஐந்து விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்நிலையில் முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி முஷ்பீகுர் ரஹிமின் சதத்தின் (126) உதவியோடு 369 ஓட்டங்களை பெற்றது. அணித்தலைவர் ஷகீப் அல் ஹசன் 94 பந்துகளில் 87 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.



அயர்லாந்து அணி சார்பில் அன்டி மக்பிரின் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இன்னிங்ஸ் தோல்வி ஒன்றை தவிர்க்கும் நெருக்கடியோடு இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த அயர்லாந்து அணிக்கு விக்கெட் காப்பாளர் லுகன் டுகர் கன்னி சதத்தை பெற்றார். இதன்மூலம் அயர்லாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 292 ஓட்டங்களை பெற முடிந்தது.

அயர்லாந்து அணி அடுத்து இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையே இரண்டு டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ளதோடு இதன் முதல் போட்டி வரும் ஏப்ரல் 16 ஆம் திகதி காலியில் ஆரம்பமாகவுள்ளது.

# 2022ஆம் ஆண்டில் விசா விண்ணப்ப கோரிக்கைகள் மூன்று மடங்காக அதிகரிப்பு



சர்வதேச எல்லைகளின் திறப்பு மற்றும் தளர்த்தப்பட்ட கொவிட் நெறிமுறைகளினால் 2022ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்தான விசா விண்ணப்பங்கள் கணிசமான மீட்சியைக் கண்டது. அரசாங்கம் மற்றும் இராஜதந்திர பணிகளுக்கு உலகின் மிகப் பெரிய வெளிவாரி சேவை வழங்குனர் மற்றும் தொழில்நுட்ப சேவை நிபுணர்களாகவும் விளங்கும் ; VFS Global இற்கு இணங்க பெருந்தொற்றுக்கு முந்திய காலத்துடன் ஒப்பிடுகையில் இலங்கையிலிருந்தான விசா விண்ணப்பங்கள் 68வீதம் வரை எட்டியது. இது 2021ஆம் ஆண்டு சர்வதேச எல்லைகளின் திறப்புடன் ஒப்பிடுகையில், 2022ஆம் ஆண்டில் இவ்விண்ணப்ப கோரிக்கைகள் மூன்று மடங்கு அதிகரிப்பை பதிவு செய்தது.

2022ஆம் ஆண்டு முற்றிலுமாக இலங்கையிலும் மற்றும் தெற்காசிய பிராந்தியத்திலிருந்தும் முன்னெப்போதும் இல்லாத பாரிய கேள்வி நிலவியதை நாம் கண்டோம். அது டிசம்பர் மாதம் வரை உச்ச வெளிவாரி பயணங்கள் காலத்தை நீட்டிக்கவும் காரணமாக அமைந்ததுடன் அது நிலையானதாகவும் காணப்பட்டது. இது தொடர்ந்தும் வளர்ந்து வரும் என்பதை நாம் உறுதியாக நம்புவதுடன் விண்ணப்பதாரிகளுக்கு தங்கள் விசாக்களுக்கான விண்ணப்பங்களை முன்கூட்டியே செய்து கொள்வதுடன் இறுதி நேரம் வரை காத்திருந்து ஏமாற்றங்களை சந்திக்க வேண்டாம். என VFS Global இன் சிரேஷ்ட செயன்முறை அதிகாரியான ( தெற்காசியா ) பிரபுத்தா சென் தெரிவித்தார்.

மேலும் பெருந்தொற்றுக்கு பிறகு தனிப்பட்ட சேவைகளை பயணிகள் பெருவாரியாக ஏற்றுக் கொண்ட மற்றுமொரு வரையறுக்கு போக்கும் பயணிகளின் நடத்தையில் காணப்பட்டது. Visa At Your Doorstep, (VAYD) எனும் விசா உங்கள் வீட்டுக்கே போன்ற உன்னத மேலதிக சேவைகளின் மூலம் பயணிகளுக்கு தங்கள் விரும்பும் இடத்திற்குச் செல்வதான சகல விசா பதிவுகளுக்கான நடவடிக்கைகளையும் ஒரே இடத்திலிருந்து செய்துகொள்ளக்கூடியதாக இருந்ததுடன் அது 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டில் இண்டு மடங்காக அதிகரித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 1990 சுவ செரிய அம்பியூலன்ஸ் சேவைக்கு ஜோன் கீல்ஸ் குழுமம் 100 மில். ரூ அன்பளிப்பு




ஜோன் கீல்ஸ் குழுமம், சுவ செரிய மருத்துவ ஊர்தி சேவையின் செயற்பாடுகளுக்காக சுவ செரிய அறக்கட்டளைக்கு 100 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. நிதி நெருக்கடிகளை எதிர்கொள்ளும் மருத்துவ ஊர்தி சேவைக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்தப் பங்களிப்பு, இலங்கையில் உயிர்காக்கும் அவசர மருத்துவ உதவிகளை தொடர்ந்து வழங்குவதற்கு இடமளிக்கும்.

2016 இல் சுவ செரிய மருத்துவ ஊர்தி சேவை இந்திய அரசின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டது. நாடு முழுவதும், குறிப்பாக கிராமங்களில் மற்றும் தொலைதூர பகுதிகளில் வசிப்பவர்கள், அத்தியாவசிய சுகாதார வசதிகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகலைக் கொண்டவர்களுக்கு அவசர மருத்துவ உதவிகளை வழங்கும் நோக்கத்துடன் இந்த சேவை உருவாக்கப்பட்டது. சுவ செரிய மருத்துவ ஊர்தி சேவை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, ஆயிரக்கணக்கான நபர்களுக்கு அவசர மருத்துவ உதவிகளை வழங்கி, எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றியுள்ளது.

சுவ செரிய சேவை அரசாங்கத்தால் பாதீட்டு குறைநிரப்பியின் கீழ் ஆதரிக்கப்படும் அதே வேளையில், சமீபத்திய நாட்டுச் சூழல் காரணமாக எழும் நிதிக் கட்டுப்பாடுகள் சேவையின் நீடித்த செயல்பாடுகளை பாதிக்கின்றன. சேவை தேவைப்படுபவர்களுக்கு உயிர்காக்கும் மருத்துவ உதவிகளை தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்வதற்காக, ஜோன் கீல்ஸ் குழுமம் சுவ செரிய அறக்கட்டளைக்கு 100 மில்லியன் ரூபாய் நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

தினகரன் வர்த்தக உலா

# கட்டான தொழிற்சாலை தாக்குதல் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் கோரிக்கை

கட்டானாவின் ஹல்பேயில் உள்ள ஓமான் ஆடைத் தொழிற்சாலையின் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பாதுகாப்பு அதிகாரி மீது தனிநபர்கள் குழுவொன்று கடந்த வாரம் மேற்கொண்ட தாக்குதலை வன்மையாக கண்டிப்பதோடு, பொறுப்புள்ள அதிகாரிகள் இதுகுறித்து பாரபட்சமற்ற விசாரணை மற்றும் விரைவான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஓமானிய பிரஜையான முகாமைத்துவ பணிப்பாளரின் இல்லத்திற்குள் அத்துமீறி நுழைந்த குழுவொன்று மேற்கொண்ட இந்த சட்டவிரோதமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதினால் முகாமைத்துவப் பணிப்பாளரும் பாதுகாப்பு உத்தியோகத்தரும் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவு நிறுவனமான இந்த தொழிற்சாலையினால் 300 மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

"ஆடைத் தொழிலில் துறையின் பாரிய அமைப்பாக, இதுபோன்ற வன்முறைச் செயல்களை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். சட்ட அமுலாக்க அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு, சட்டத்தினை நிலைநிறுத்தவும், இந்தத் தாக்குதலைத் தூண்டியவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்வும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாங்கள் எமது அனுதாபத்தை தெரிவிப்பதோடு, இந்த விவகாரம் நாட்டின் சட்டங்களின்படி அமைதியான முறையில் தீர்வுகாணும் வரை பொறுமையோடு காத்திருக்கும் படியும் கேட்டுக்கொள்கிறோம்." என கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் அறிமுகமாகிறது Jabra வீடியோ Conferencing Technology



படமும் தகவலும்: (ருசைக் பாரூக்)

இலங்கையின் முன்னணி நிறுவன தொழில்நுட்ப தீர்வு வழங்குநர்களில் ஒருவரான ZILLIONe, கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் அணமையில் நடைபெற்ற Discover Life's New Rhythm என்ற நிகழ்வில் Jabra வீடியோ Conferencing Technology மற்றும் Evolve 2 Buds அறிமுகப்படுத்தியது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள், ஜப்ரா தெற்காசியா அணியினருடன் உரையாடும் வாய்ப்பும், பீடர் ஜெயசீலன், வினோத் குமார், மற்றும் சுவாமிநாதன் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சாதனங்களைப் பற்றிய அனுபவத்தைப் பெறும் வாய்ப்பும் கிடைத்தது.

நிகழ்ச்சியில் உரையாற்றிய ZILLION குழுமத்தின் தலைமைச் செயல் அதிகாரி சுஜான் சுரேஷ்,

"அதிகமான மக்கள் தொழில்நுட்ப தீர்வுகளுக்கு ஏற்ப மாறுவதால், திரைப்படங்கள் மற்றும் சந்திப்புகளின் புதுமை இப்போது எங்கள் புதிய இயல்பானதாகிவிட்டது . எனவே, நாம் அதனுடன் வாழ வேண்டும் என்றால், அதை சிறந்ததாக்க ஏன் முதலீடு செய்யக் கூடாது? என்றார். Evolve 2 Buds என்பது ஒரு ஜோடி வயர்லெஸ் மற்றும் போர்ட்டபிள் இயர்பட்கள் ஆகும், இது 33 மணிநேரம் வரை பேட்டரி ஆயுள் நீட்டிக்கப்பட்டுள்ளது மற்றும் விரைவான சார்ஜிங் திறன்களைக் கொண்டுள்ளது, இது ஹைப்ரிட் மற்றும் ரிமோட் வேலை அமைப்புகளுக்கு மிகவும் பொருத்தமான ஆடியோ தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட வயர்லெஸ் யுஎஸ்பி சாதனத்தை லேப்டாப்பில் செருகுவதன் மூலம், பணி தொடர்பான அழைப்புகளைச் செய்ய அல்லது உயர் ஆடியோ தரத்துடன் இசையை ரசிக்க இந்தச் சாதனம் பயனர்களுக்கு உதவுகிறது.

புத்தாண்டு காலத்தில்

# கொமர்ஷல் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணம் பெறுவோருக்கு அடையாளப் பரிசு



கொமர்ஷல் வங்கி ஏப்ரல் 3 இலிருந்து 12ம் திகதிக்குள் தனது எந்தவொரு கிளையிலிருந்தும், வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணம் பெற்றுக் கொள்ள வரும் ஒவ்வொருவருக்கும் செழிப்புக்கான அடையாளப் பரிசொன்றை வழங்க முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. இதன்படி, கொம்பேங்க் ரெமிட் பிளஸ், வெஸ்டேர்ன் யூனியன், மணிகிராம் மற்றும் ரியா ரெமிட்டன்ஸ் சேவைகள் மூலம் பணம் பெறும் எவரும், அவர்கள் கொமர்ஷல் வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் இல்லாவிடினும், ஒரு சிவப்பு பாசுமதி அரிசி பாக்கெட்டை வெகுமதியாக பெறுவார்கள். வங்கியின் கிரிபத்கொட கிளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இந்த விசேட செயற்பாட்டை வங்கி ஆரம்பித்து வைத்தது. இந்நிகழ்வில் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க, தலைமைச் செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர், வங்கி நிர்வாகத்தின் பிரதிநிதிகள் மற்றும் சில பணப் பரிமாற்றம் வாடிக்கையாளர்களும் கலந்துகொண்டனர். இதேபோன்ற செயற்பாடுகள் வங்கியின் யாழ்ப்பாணம், காலி மற்றும் கல்முனை கிளைகளிலும் இடம் பெற்றன.

# நன்னீர் நீச்சல் தடாக தொழிநுட்பத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தும் Sirocco



குளோரின் இல்லாத தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலங்கையின் குடியிருப்புக்கள் மற்றும் தொழில்துறை நீச்சல் குளங்களை உருவாக்குவதற்கும் ஏற்கனவே குளோரின் பயன்படுத்தப்படும் நீச்சல்தடாகங்களை இப்புதிய தொழிநுட்பத்தினால் மாற்றுவதற்குமான தங்கள் தொலைநோக்குப் பார்வையை ஊக்குவிக்கும் நோக்கோடு சமீபத்தில் Jetwing Colombo Seven இல் ஒரு திறந்த மன்றத்தை Sirocco Group of Companies குழுமத்தின் துணை நிறுவனமான Sirochem Aqua (Pvt) Ltd. நடாத்தியது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட புகழ்பெற்ற கட்டிடக் கலைஞர்கள் மற்றும் பொறியியலாளர்கள், அவர்களது செயல் திட்டங்களை மேம்படுத்தும் திறன் கொண்ட நீச்சல்தடாக தொழில்நுட்பத்தில் புதுமை மற்றும் முற்போக்கான முன்னேற்றங்களைக் கண்டறிய முனைந்தனர்.

Sirochem Aqua நிறுவனம் அதன் சர்வதேச பங்காளரான NatureSwim நிறுவனத்தை இந்நிகழ்வில் உபசரித்தது. நீச்சல் தடாகத்தில் உள்ள நீரை குடிப்பதற்கேற்றவகையில் சுத்திகரிக்கும் திறன்வாய்ந்த இத்தொழிநுட்பம், இயற்கையாகவே காணப்படும் சுத்திகரிப்பு அமைப்புக்களின் நுட்பங்களை மீளுருவாக்கம் செய்வதன்மூலம் அமைக்கப்பட்டுள்ளதென NatureSwim நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி / மேம்பாட்டு பணிப்பாளர் மத்தியாஸ் நோர்டின் தெரிவித்தார்.

அதாவது, இந்த தொழிநுட்பத்தில் உபயோகிக்கப்படும் விரிவான மின்னணு ஒக்சிஜனேற்றம், அயனாக்கம் மற்றும் மீயொலி செயல்முறைகள், மாசுபட்ட நீரை சுத்திகரிக்கப்பட்ட குடிநீராக மாற்றுகிறது!

14 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பாட்டில் உள்ள Sirocco நிறுவனமானது, உலகளாவிய ரீதியில் மிகவும் பாரிய பல்வகை காற்றோட்ட மின்விசிறி தொகுதிகளைக் கொண்டுள்ளதோடு, பல்வேறு உள்ளூர் மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களுக்கு காற்று சுத்திகரிப்பு மற்றும் காற்றோட்ட அமைப்புகளில் 1500 இற்கும் மேற்பட்ட நிறுவல்களை நிறைவு செய்துள்ளது.

# அலுமினியம் உற்பத்தியாளர்களை மேம்படுத்தும் 'Divikavuluwa' திட்டம் அறிமுகம்




உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு வலுவூட்டல் மற்றும் தொழில்துறையை வலுப்படுத்துதல், இலங்கையின் மறுக்கமுடியாத சந்தைத் தலைவரும் மற்றும் மிகப்பெரிய அலுமினியம் வெளியேற்றும் உற்பத்தியாளருமான Alumex PLC, அதன் முதன்மையான நம்பகத் திட்டமான 'Divikavuluwa'வை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது.

'Divikavuluwa' என்பது சமூகத்தை மையமாகக் கொண்ட தொடர் முயற்சிகளில் மிகச் அண்மைக்காலத்தை உடையது, இது Fabricatorsகளின் எதிர்கால வாய்ப்புகளை வலுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

"எங்கள் வளர்ச்சியானது, உருவாக்குபவர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் பரந்த வலையமைப்பின் சமூகத்துடன் உள்ளார்ந்த வகையில் இணைக்கப்பட்டுள்ளது" என Alumexஇன் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரமுக் டெடிவெல கூறினார். "தொழில்துறையின் தலைவருடன் இருக்கும் பொறுப்பை நாங்கள் அறிந்திருக்கிறோம், மேலும் ஒட்டுமொத்தத் துறையின் வளர்ச்சியை உறுதி செய்வதில் உறுதியாக இருக்கிறோம். எங்களுடைய முழுமையான திறனை அடைவதற்காக, தேசத்தில் அலுமினியம் உற்பத்தியாளர்களின் வலையமைப்பை வலுப்படுத்துவதையும் வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்ட Divikavuluwa திட்டத்தை நாங்கள் ஆரம்பித்துள்ளோம்."

திட்டத்தின் ஒரு பகுதியாக, அனைத்து Alumex தயாரிப்புகளும் இப்போது ஸ்டிக்கர்களின் வடிவத்தில் பார்கோடுகளைக் கொண்டிருக்கும், இதன் மூலம் ஃபேப்ரிக்கேட்டர்கள் தங்கள் புள்ளிகளை எளிதாக மீட்டு தங்கள் கணக்கில் வரவு வைக்க உதவுகிறது.

Divikavuluwa திட்டத்தின் மூலம், Fabricatorகள் காலப் போக்கில் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்,




ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம் 2022 ஆம் ஆண்டிற்கான ஸ்ரீலங்கா இன்சூரன்ஸின் MDRT வெற்றியாளர்களை கௌரவிப்பதற்கும் அங்கீகரிப்பதற்காகவும் அதன் MDRT தினத்தை நடத்தியது. இந்நிகழ்வு Cinnamon Grand இல் நிறுவன தலைவர் முன்னிலையில் நடைபெற்றது.